# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"
—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

| மாலை 2 | ஞாயிறு 11-6-39 பிரமாதி௵ வைகாசி௴ 28௳ | முத்து 11 |
|---|---|---|

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| காந்திஜியின் புது ஒளி | ... ... ... ... ... | 320 |
| குறிப்பு | ... ... ... ... ... | 322 |
| தென்றல் காற்று | ... ... ... ... ... | 324 |
| வார நடப்பு | ... ... ... ... ... | 326 |
| விதி | ... ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி | 327 |
| ஐக்கிய நாணய சங்கங்கள் | ... "பாலு" | 331 |
| ரிக்ஷா | ... ஸ்ரீ ரா. ஆறுமுகம் | 335 |
| இரணங்கள் | ... ஸ்ரீ எஸ். சுந்தரம் | 337 |
| அறிவாள் மணை | ... "குஞ்சு" | 339 |
| சிறுவர் பகுதி | ... ஸ்ரீ எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி | 341 |
| கடிதம் | ... ஸ்ரீ சண்முக சுந்தரம் | 344 |
| பிருந்தாவனம் | ... ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி | 345 |
| குற்றவாளி | ... ஸ்ரீ கி. பி. நாகராஜன் | 347 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# காந்திஜியின் 'புது ஒளி'

மகாத்மா காந்தி சமஸ்தானப் பிரச்னை சம்பந்தமாக ஓர் புதுக்கொள்கையைக் கண்டு பிடித்திருக்கிறார். கொஞ்ச காலத்துக்கு முன் அவர் சமஸ்தானங்களில் நடைபெறும் சட்ட மறுப்புப் போரை நிறுத்திவைத்தார். சமீபத்தில், ராஜகோட்டுக்கு வந்ததும் கயர் தீர்ப்பைக் கூட விட்டுக்கொடுத்து தாகூர் சாகிபையும் வீரவாலாவையும் நம்பும்படி பிரஜைகளுக்கு உபதேசம் செய்தார். இப்போது திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸுக்கு காந்திஜி செய்யும் உபதேசத்தில் தனது புதுமுறையை விளக்குகிறார்.

திருவாங்கூர் சட்டமறுப்பை குறிப்பிடாத ஓர் காலம்வரை தள்ளிப்போட்டு விடவேண்டுமென்றும், மகாராஜாவுடனும் திவானுடனும ராஜி பேசி ஓர் கௌரவமான ஒப்பந்தத்தை நாடவேண்டுமென்றும், எல்லாவற்றிற்கும்மேலாக, காங்கிரஸின் நிர்மாண வேலைகளில் கவனத்தைச் செலுத்தவேண்டுமென்றும் காந்திஜி கேட்டுக் கொள்கிறார்.

மகாத்மா காந்தியின் இந்த யோசனையை திருவாங்கூர் தலைவர்கள் ஒப்புக் கொண்டு புதுக்கொள்கையை நிறைவேற்றி வைப்பார்களென்பதில் சந்தேகமில்லை. திருவாங்கூரில் ஒரு சிலர் காந்திஜியின் முறையால் ஏமாற்ற மடையலாம். ஆனால் பெருவாரி மக்கள் காந்திஜியைப் பின்பற்றுவார்கள்.

இந்தப் புதுக்கொள்கை சமஸ்தானப் போராட்டத்தை குறிப்பிடாத காலத்துக்குத் தள்ளிப்போட்டு விட்டது. இதைப் பார்த்தசிலர் "காந்திஜி யுத்த மனப்பான்மையை விட்டு விடடு சமாதானத்தில் இறங்கி விட்டார். காந்திஜி போராட்டத்தை இனிமேல் நடத்த லாயக்கில்லை" என்று எண்ணலாம். தற்போது காந்திஜி சமாதானப் பாதையில் இறங்கித்தான் இருக்கிறார். ஏன்? சமாதானமான ஓர் நிலையை உண்டாக்குவதற்காகத்தான். எதற்காக இப்போது சமாதான நிலை உண்டாக்க வேண்டும்?

பல சமஸ்தான மன்னர்கள் சமாதானம் நிலவினால்தான் சீர்திருத்தங்கள் கொண்டு வர முடியுமென்றும், தங்கள் மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமென்றும் கூறுகிறார்கள். "அப்படியானால் ரொம்ப நல்லது. இதோ போராட்டம் நின்றுவிட்டது. நீங்கள்—உங்கள் வார்த்தைகளை எவ்வளவு தூரம் காப்பாற்றுவீர்கள், பார்க்கலாம்" என்று காந்திஜி போரை நிறுத்திவைத்திருக்கிறார்; அவ்வளவுதான். ஆனால் எப்போதுமே இந்த சமாதானம் . நிலைத்திருக்குமென்ற நினைப்பால் சமஸ்தானாதிபதிகள் தூங்க முடியாது.

எப்போதுமே காந்திஜி போரை நடத்தாமல் இருப்பார் என்று தீவிர வாதிகள் சந்தேகப்படவேண்டியதில்லை. உண்மையில், காந்திஜி சமஸ்தான மன்னர்களுக்கு 'மூச்சுவிட' அவகாசம் கொடுத்திருக்கிறார். அவ்வளவுதான்.

அடுத்த வாரத்தில் மன்னர்கள் சமஷ்டியில் சேருவதா வேண்டாமா என்ற விஷயத்தில் கடைசியாக ஒரு முடிவிற்கு வரப் போகிறார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்கள் என்னசெய்யப் போகிறார்கள்? பொறுப்பாட்சி சம்பந்தமாக அவர்கள் எப்படி நடந்துகொள்ளப்போகிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார் காந்திஜி. போராட்டத்தினால் நிலைமையை நெருக்கடியாக்கிக் குழப்பத்தை உண்டாக்க அவர் விரும்பவில்லை,

மேலும், சமஸ்தான விடுதலை இயக்கத்திற்கு விரோதமாக அரசியல் இலாகா

மட்டுமல்லாமல் சில குறிப்பிட்ட மனிதர்களும் சமூகங்களும் இருப்பதை காந்திஜி அறிகிறார். அவர்கள் இஷ்டமும் சம்மதமும் இல்லாமல் பொறுப்பாட்சிப் போராட்டம் பலன் தராதென்பது அவர் எண்ணம். ஆனால் அவர்கள் நிலைமையை அவர்களே உணர்ந்து திருத்திக்கொள்ள அவகாசம் கொடுத்திருக்கிறார்.

டால்சர், ரான்பூர் முதலிய இடங்களில் காந்திஜி கண்ட கொடுமைதான் அவருடைய புதுக்கொள்கைக்கு ஓரளவு காரணமாக இருக்கவேண்டும். ஆயிரக்கணக்கான மனிதர்களை மிருகங்களை வேட்டையாடுவது போல அதிகாரிகள் வேட்டையாடினார்கள். ஜனங்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள். இந்தக் கொடுமையை மத்திய சர்க்கார் கண்டிக்காததுமன்றி டால்சர் சமஸ்தான சர்க்கார் வாக்கு மீறியதற்கும் காரணமாயிருந்தார்கள். மிருக பலத்தைக்கொண்டு இப்படி அதிகாரிகள் பொறுப்பாட்சிப் போரை ஒடுக்குவதற்காக காந்திஜி பயப்படவில்லை. ஏனென்றால் அத்தகைய அடக்குமுறையை அவர் அனுபவித்தவரல்லவா? ஆனால் போதுமான பலத்தைப் பொறுப்பாட்சி இயக்கம் அடையவில்லை என்பது அவர் கருத்து.

சமஸ்தானங்களிலுள்ள இயக்கம் போதிய பலம் பெறவில்லை என்பதை சமஸ்தான காங்கிரஸ் தலைவர்சள் ஒப்புக்கொள்ளாவிட்டால்கூட பிரிட்டிஷ் இந்திய மக்கள் அடைந்துள்ள அளவுக்கு சமஸ்தான ஜனங்கள் விழிப்படையவில்லை என்பது உண்மை.

இத்தகைய விழிப்பு அடையவேண்டுமானால் காங்கிரஸின் நிர்மாணக் கொள்கைகளைத் தீவிரமாக சமஸ்தானங்கள் எங்கும் பரப்ப வேண்டும். அப்போது இயக்கம் எங்கும் வேரூன்றும். எந்தமன்னரும் பிரஜைகளின் கோரிக்கையை நிராகரிக்க முடியாது. அத்தகைய பலம் பெற்ற ஓர் ஸ்தாபனம் எந்தசமயத்திலும் போராட்டத்தை ஆரம்பிக்கலாம். ஏன், போராட்டத்தை ஆரம்பிக்காமலே வெற்றியைக் கொண்டுவர அதற்குத் திறமை உண்டு. மகாத்மா காந்தியின் புதுக் கொள்கை சமஸ்தான இயக்கங்களுக்கு வலிவும் வன்மையும் கொடுத்து, வரப்போகும் நெருக்கடியில் வெற்றியும் கொடுக்கும் என்று நம்புகிறோம்.

---

## ஒரு விஷயம்!

நீங்கள் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறீர்கள். ஆனால் மிகவும் உபயோகமான வழியில் செலவு செய்வது அவசியமல்லவா? உங்களுக்கு சந்தோஷத்தையும், உங்கள் குழந்தைகளுக்கு அறிவையும், கொடுக்கக்கூடிய வழியில் நீங்கள் ஏன் செலவழிக்கக்கூடாது? ஆம்; "பாரத மணிக்கு" ஒரு வருஷம் சந்தாவைக் கட்டிவிடுங்கள். அந்தப்பணம் வீண் செலவல்ல.

குறிப்பு

# சவர்க்காரின் கீதம்

ஸ்ரீ விநாயக தாமோதர சவர்க்கார் பெரிய வீரர்; தீரர்; வாசாலகர்; சுயநலமற்றவர்; தியாகி. ஆமாம்; இவ்வளவு நற்குணங்கள் இருந்தும் ஒரு துளி விஷம் அவர் இரத்தத்தில் கலந்துவிட்டது. பாவம், யார் செய்த பாவமோ, வகுப்புவாதம் அவரைத் தொத்திக் கொண்டது. முஸ்லிம்களில் ஜின்னா எப்படிப் பேசுகிறாரோ அதே ரீதியில் ஹிந்துக்கள் சார்பாகப் பேசுகிறார் சவர்க்கார். ஜின்னாதான் தேசபக்தியில் குறைந்தவரா என்ன? ஆனால் வகுப்புவாத வலையில் வீழ்ந்துவிட்டால் எவ்வளவு பெரிய தலைவர்களாயிருந்தாலும் எவ்வளவு மோசமாகப் போய்விடுகிறார்கள் என்பதையே நாம் இவ்விருவரையும் பார்க்கும்போது அறிகிறோம். படித்த கெட்டிக்காரர்கள் விஷயமே இப்படியிருக்கும்போது பாமரர்கள் வகுப்புவாதத்தில் வீழ்ந்தால் என்ன ஆகுமென்று சொல்லத் தேவையில்லை. அத்தகைய அபாயத்தைத்தான் காங்கிரஸ் தலைவர்கள் சுட்டிக் காட்டிப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் நல்ல காரியங்கள் பொதுவாக காதில் விழாது; வகுப்புவாதம் உடனே ஏறும். நிஜத்தைவிட பொய் வேகமாய் பரவுகிறதல்லவா?

ஜின்னாவும் அவர் தோழர்களும் இந்தியாவைப்பிரித்துப் பாதி அவர்களுக்குக் கொடுத்துவிடும்படி கேட்கிறார். சவர்க்கார், இந்தியா ஹிந்துக்களுக்குத் தான் சொந்தம் பாக்கிப் பேர் அந்நியர்கள் என்கிறார். அவர் ஜப்பல்பூரில் பேசிய பேச்சில் "ஹிந்துக்களுக்குத் தான் இந்தியாவை ஆள உரிமை இருக்கிறது" என்று கூறினார். மேற்சொன்ன நண்பர்கள் பேச்சைப் பொதுஜனங்கள் கேட்டால் தேசத்தில் உள்நாட்டுக் கலகம் தான் விளையும் என்பதில் சந்தேகமில்லை.

## வகுப்பு வாதம்

வகுப்பு வாதப் பிடித்துப் பிடித்த சிலரைத் தவிர தேசத்திலுள்ள மற்ற பெரும்பாலான ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாய் வாழ ஆசைப்படுகிறார்கள். பொருளாதார வாழ்வில் ஒவ்வொரு சமூகமும் ஒன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொருளாதார ஒற்றுமையை ஹிந்து முஸ்லிம் குடியானவர்களிடமும் தொழிலாளர்களிடமும் காண்கிறோம். ஆனால் சொந்த நலனுக்காக சில சுயநலக்காரர்கள் மக்கள் அறியாமையை முதலாக வைத்துக்கொண்டு, 'பகிஸ்தானம் வேண்டும்' என்றும், முஸ்லிம்கள் கொடுமை செய்கிறார்கள் என்றும் கூறி ஜனங்கள் உணர்ச்சிகளைக் கிளப்பி விடுகிறார்கள். தாங்கள் ராஜீய செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள வகுப்பு வாதத்தைத் தவிர வேறு சிறந்த சாதனம் அவர்களுக்கு அகப்படவில்லை.

சமீபத்தில் நிறைவேறிய காங்கிரஸ் தீர்மானமொன்றில் ஹிந்து மகா சபையும், முஸ்லிம் லீக்கும் வகுப்புவாத சபைகள் என்று ஊர்ஜிதம் செய்யப் பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் நிறைவேறியதுடன் நின்றுவிடாமல், வகுப்புவாதப் பிரசாரத்தை நிறுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் சர்க்கார்களும் மற்ற நேர்மையான அரசாங்கங்களும் வகுப்புவாதக் கலவரங்களை அடக்குவதோடு நின்றுவிடக்கூடாது. அந்தக் கலவரங்களுக்குக் காரணமான பிரசாரத்தை ஒடுக்கவேண்டும்.

## இந்தியாவின் எதிரி நம்பர் 1

இனிமேல், வகுப்புவாதத்தைக் கிளப்பிவிடுகிறவர்கள் எவ்வளவு பெரிய தலைவர்களாயிருந்தாலும் சரி, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, அவர்களை இந்தியாவின் முதல் நம்பர் எதிரிகளாக நாம் கருதவேண்டும். அவர்கள்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் சர்க்கார்களுக்கு ஏற்பட்டுவிட்டது. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. சர்க்கார் அவ்விதம் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டால் வகுப்புவாதிகள் முதலில் கலகம் செய்யத்தான் செய்வார்கள். ஆனால் மிகவும் கொடிய சட்டத்தைப் போட்டாவது அவர்களை அடக்கித்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் தேசத்துக்கு ஆபத்து. சமீபத்தில் உள்நாட்டு மந்திரிகள் டெல்லியில் செய்த தீர்மானங்களை உடனே அமுலுக்குக் கொண்டு வந்து வகுப்புவாதத்தை ஒடுக்குவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

## சென்னையில் தொழிற்சாலைகள்

சென்னை சர்க்கார் தொழில் அபிவிருத்தித் திட்டத்தில் காண்பிக்கும் அசிரத்தை ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. காங்கிரஸ் மந்திரி

சபை ஏற்பட்டு இரண்டு வருஷங்களாகியும் தொழில் அபிவிருத்திக்கோ, படித்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவோ என்ன முயற்சிகள் செய்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. குடியானவர்கள் பிரச்னை அவர்கள் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் நகரங்களில் வேலையில்லாமல் தவிக்கும் வாலிபர்கள் விடுதலை நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். "அசட்டுத்தனமாய் பி.ஏ., எம் ஏ., படித்தோம்; ஆனால் காங்கிரஸ் ஆட்சியால் விமோசனம் கிடைக்கும்" என்பது அவர்கள் நினைப்பு. கடைசியில் அந்த நினைப்பும் அசட்டுத்தனமாய் முடிந்தது!

பம்பாயில் கூடியுள்ள தேசிய அபிவிருத்திக் கமிட்டி என்ன தீர்மானம் செய்யப்போகிறதோ தெரியாது. அந்தத் தீர்மானங்களை மாகாண சர்க்கார் சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நமது வாலிபர்கள் பிள்ளையாரை வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நமது மாகாண சர்க்கார் பம்பாயை நோக்கி திறந்த கண்ணை மூடாமலே பார்த்துக் கொண்டிருந்தால்கூட, கொஞ்சம் மைசூர் பக்கம் திரும்பிப் பார்க்கட்டும். அந்த சமஸ்தானத்தில் எவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதனால் எவ்வளவுதூரம் வேலையில்லாப் பிரச்னை தீர்ந்திருக்கிறதென்று கவனிக்கட்டும்.

## மறுபடியும் ஸிலோன்

மறுபடியும் ஸிலோனிலிருந்து ஒரு திடுக்கிடத்தக்க செய்தி வருகிறது. தனிப்பட்ட நபர்கள்கூட இந்தியர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியாதபடி சட்டம் கொண்டுவர சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறதாம். அதாவது, இந்தியர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளும் நபரின்மீது வரிபோடப் போகிறார்கள். இதனால் எல்லோரும் இந்தியர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளாமல் சிங்களவரையே வைத்துக் கொள்வார் என்பது அவர்கள் எண்ணம். இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியைக் கண்டு நமது இந்திய சர்க்கார் என்ன செய்யப்போகிறது? ஸ்ரீ ராமதாஸ் பந்துலு கூறியபடி ஸிலோனிலிருந்து இறக்குமதியாகும் கொப்பரைமீது தடைவரி விதித்து ஸிலோன் சர்க்காருக்கும் புத்திமதி கற்பிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

## 'தேடிஸ்' விபரீதம்

'தேடிஸ்' என்ற பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பலுக்கு விபத்து ஏற்பட்டு அதனால் 99 பேர் இறந்த துக்ககரமான செய்தியைக் கேட்டோம். அடிமை நாட்டிலுள்ள நமக்கு நீர்மூழ்கிக் கப்பலில் சவாரி செய்வதும், அதனால் ஆபத்துக்குள்ளாவதும் அறியக்கூடாத உணர்ச்சிகள். ஆனால் தலைவன் பிரிவால் வருந்தும் மனைவி குழந்தைகளின் உணர்ச்சிகளை நாம் அறிவோம்; அவர்களுக்கு நம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

'தேடிஸ்' மறைவினால் ஓர் விஷயம் புலனாகிறது. மனிதன் இயற்கையை வென்றுவிட்டதாக அடிக்கடி கூறிச் சந்தோஷப்பட்டுக் கொள்கிறான். அது எவ்வளவு அல்ப சந்தோஷம் என்பதைத் தான் இந்த சம்பவம் நமக்குக் காட்டுகிறது. நவீன சாஸ்திர வெற்றிகளுக்கும் ஓர் வரையறை உண்டு; மனிதனின் சக்திக்கு எல்லை உண்டு என்பதை இத்தகைய விபத்துக்கள் விளக்கிக் காண்பிக்கின்றன. இயற்கை அன்னை மகாபலம் பொருந்தியவள். நம்முடைய விக்ஞானத்தால் அவன் பலம் ருஜுவாகும்; நமது பலவீனம் தான் ருஜுவாகும்.

## மஞ்சூகோவில்

மஞ்சுகோவின் எல்லைப்புறத்தில் ஜப்பானியப் படைகளும் ரஷ்யப் படைகளும் மோதிக் கொண்டதாக ஓர் செய்தி கூறுகிறது. இந்த சம்பவத்தால் என்ன ஏற்படுமென்று நம்மால் கூற முடியாது. இதனால் எவ்வளவோ தடபுடல்கள் ஏற்படலாம். இது 'புஸ்' வாணமாகவும் போகலாம். ரஷ்யாவின் கவனத்தை கிழக்கே இழுப்பதற்காக ஜப்பானியர்கள் முயற்சி செய்கிறார்களென்று மட்டும் நிர்மாணமாகச் சொல்லலாம். ஆங்கிலோ-ரஷ்யப் பேச்சு நடந்து வரும் இந்த வேளையில் கிழக்கில் இந்த மாதிரி இடைஞ்சல் உண்டாக்கினால் ரஷ்யாவுக்கு கொஞ்சம் வெலவெலப்பு உண்டாக்கலாம் என்று ரோம்-பர்லின்-டோக்யோ அச்சு நினைத்திருக்கலாம். எந்த நெருக்கடியையும் சமாளிக்கக்கூடிய பலம் பெற்றிருக்கும் ரஷ்யா இதைக்கண்டு பயப்படாதென்பது நிச்சயம்.

# தென்றல் காற்று

முஸ்லீம்களை காங்கிரஸில் சேர்க்க இதுவரை காங்கிரஸ்காரர்கள் முயலவில்லை என்றும் சுயராஜ்யம் என்பது உணவுப் பிரச்னையைத் தீர்க்கக் கூடியது என்பதை அவர்கள் அறியும்படி செய்திருந்தால் முஸ்லீம்கள் காங்கிரஸில் சேர்ந்திருப்பார்கள் என்றும் ஸ்ரீ சுபாஷ்சந்திரபோஸ் சமீபத்தில் கூறினர்.

* * *

சுபாஷ் சொல்லுவதை நாம் ஒப்புக்கொண்டால், இதுவரை காங்கிரஸ் சுயேச்சை என்ருல் வேறு ஏதோ ஒரு பிரச்னையைத் தீர்க்கக் கூடியது என்று பிரசாரம் செய்தது என்று ஏற்படுகிறது. உதாரணமாக, நமது அல்லது நமது குழந்தைகளின் கலியாணப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு சுயேச்சை வேண்டுமென்று கூறிவந்திருக்கலாம். அல்லது எப்படி நன்ருய் சமையல் பண்ணுவதென்ற பிரச்னையைத் தீர்க்க சுயேச்சை வேண்டுமென்று பிரசாரம் செய்திருக்கலாம். இதுவரை சுயேச்சை வந்தால் நமக்கு உணவுப் பிரச்னை தீருமென்றுதான் காங்கிரஸ் சொல்லி வந்ததாக நாம் நினைத்திருந்தோம். ஆனுல் அப்படி ஒன்றும் சொல்லவில்லை என்று சுபாஷ் சொல்லும் போது நாம் என்ன செய்யலாம் ஆகவே அவர் சொல்லுவதை ஒப்புக்கொண்டு காங்கிரஸ் 'சமையல் பிரச்னையை'த் தீர்க்க சுயேச்சை அவசியம் என்று இதுவரை பிரசாரம் செய்ததாகக் கூறலாமல்லவா?

* * *

சுபாஷ் போஸ் இனிமேல் 'உணவுப் பிரச்னை'யைப்பற்றி எல்லோருக்கும் எடுத்துரைத்து ஆயிரக் கணக்கில் முஸ்லீம்களைக் காங்கிரஸில் சேர்த்து விடுவாரென்று நாம் நம்பலாம். இந்தப் பிரசாரத்துக்கு அவசியம் சாவர்க்காரையும் ஜின்னுவையும் சேர்த்துக் கொண்டால் மிகவும் உபயோகமாயிருக்கும்.

* * *

எப்படி வீட்டைக் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டுமென்று வர்மா என்பவர் ஆராய்ச்சி செய்திருக்கிருர். தரையில் சாக்கைப் போட்டுவிட வேண்டும்; மணலைக் கொட்ட வேண்டுமாம்; அறை தெற்குப் பார்த்ததாக இருக்க வேண்டும். சுற்றிலும் வெட்டிவேர் தட்டி கட்டித் தண்ணீர் தெளிக்க வேண்டுமாம் அடிக்கடி; பூமியில் அடிக்கடி தண்ணீர் தெளித்து வைக்க வேண்டுமாம்; அதற்குப் பிறகு அந்த இடம் 'ஜிலு ஜிலு' வென்று குளிர்ச்சியாக இருக்குமென்று அவர் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்து விட்டார்!

* * *

குளிர்ச்சி வேண்டுமென்ருல் இவ்வளவு சௌகர்யங்கள் செய்து கொள்ள எல்லோராலும் முடியாது. அப்படி ரொம்ப சௌகர்யங்கள் செய்து கொள்ள முடிந்தவர்கள் மலைக்குப் போய்விடுகிருர்கள். ஆனுல், ரொம்ப ரொம்ப குளிர்ச்சி வேண்டுமென்பவர்கள் இந்தச் சங்கடமெல்லாம் இல்லாமல் 'ஜில்'லென்று தண்ணீருக்குள்ளேயே குடியிருந்து விடலாமே!

* * *

பூனுவில் ஹிந்து கோவிலும் முஸ்லிம் சமாதியும் வெகு சமீபத்தில் இருக்கின்றன. ஒரே ஒரு சுவர்தான் இரண்டையும் பிரித்து நிற்கிறது. அந்த ஊரிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பரஸ்பரம் ஒத்து வாழ்வது போலவே ஒற்றுமையுடன் இரண்டையும் வழிபடுகிருர்கள். இரண்டு சமூகத்தாரும் ஒற்றுமையுடன் பணம் சேகரித்து இரண்டு புனிதமான இடங்களையும் காப்பாற்றி, சேர்ந்தாற் போல் விழாக் கொண்டாடுகிருர்கள். இவர்கள் இவ்வளவு ஒற்றுமையாயிருந்த போதிலும் இன்னும் கொஞ்சம் ஒற்றுமை உண்டாக்க சாவர்க்காரும் ஜின்னுவும் அங்கே வந்து பிரசாரம் செய்யலாம். அப்பொழுது இரண்டு சமூகங்கள் முன்னிலும் பன்மடங்கு ஒற்றுமைப் படுவார்கள்; பயமேயில்லை!

* * *

திப்பரா ஜில்லாவில் ஓர் பெண்ணுக்கு மறு விவாகம் ஆயிற்று. முதல் புருஷன் வீட்டைவிட்டு ஓடி 12 வருஷங்கள் ஆகிவிட்டபடியால் ஹிந்து தர்மப்படி அவனை இறந்தவனாகக் கருதி கிரியைகளை அவள் செய்துவிட்டு மற்றொருவனைக் கலியாணம் செய்துகொண்டாள். ஆனால் ஓடிப்போனவன் கொழுக்கட்டை மாதிரி சௌகர்யமாக இருப்பதாகவும், அவர்களைப் பார்க்க அவன் வரப்போவதாகவும் தெரிகிறது. வருகிறவன் கல்யாணம் ஆகிறதற்கு முன்னாடி வரக்கூடாதோ? கிருஹசாரம் என்றால் இதுதான் போலிருக்கிறது!

* * *

இனிமேல் தேசத்திலுள்ள பேன்கள் எல்லாம் ஒரு மகாநாடு கூட்டப் போகின்றன. ஆதியில் இந்த தேசத்தில் அவைகள்தான் இருந்ததாகவும் அதற்குப்பிறகு மனிதர் வந்ததால் அவர்கள் தலையில் ஏறிக்கொண்டதாகவும் அவைகள் கொள்கை. இப்படிக் குடியேறிய மனிதர்கள் மண்டையில் மூளை இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள தாங்கள் அடிக்கடி முயல்வதாகவும் இந்த முயற்சியில் வெற்றியடைந்து 'மனிதர்களுக்கு மூளையேஇல்லை!' என்றுகண்டுபிடித்துவிட்டதாகவும் கூறுகின்றன. மனிதர்களுக்குமூளை இல்லாவிட்டாலும்' அசட்டுத்தனம் இருக்கிறது என்பது அவைகள் அபிப்பிராயம். தாங்கள் தலையில் அதாவது, உச்சஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை கொஞ்சங்கூட கவனிக்காமல் மனிதர் தலையை வாரிக்கொண்டு தங்களுக்கு இடைஞ்சல் உண்டாக்குகிறார்களென்று புகார் கூறுகின்றன. இனிமேல் ஒருவரும் தலைவாரிக்கொள்ளக்கூடாது என்றும் அப்படிச் செய்வதால் அவைகளின் நியாயமான உரிமை பாதிக்கப் படுவதாகவும் கிளர்ச்சி செய்யப்போகின்றன. பிரதம மந்திரி வீட்டின் முன் மறியல் செய்வது உசிதமாக இல்லாவிட்டாலும் ஒரு தூது கோஷ்டி அனுப்ப உத்தேசம் இருந்து வருகிறது. இந்தப் பேன்கள் மகாநாட்டுக்கும், பம்பாய் பார்ஸிகள் கிளர்ச்சிக்கும் சம்பந்தமில்லை.

* * *

மீரத்துக் கருகிலுள்ள ஓர் நாவிதன் ஓர் போட்டி ஏற்படுத்தியிருக்கிறான்' தன்னைப் போல் நகத்தை அழகாக வெட்டுகிற ஒருவனுக்கு ரூ. 50 கொடுப்பதாகவும், யார் வேண்டுமானாலும் தன்னோடு போட்டி போடலாமென்றும் கூறுகிறான். ரொம்ப சந்தோஷம். ஆனால் யார் கை நகத்தை வெட்டுவது? எல்லோரும் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு நகத்தை அழகாக வெட்டுகிறேனென்று கையை வெட்டிவிடப் போகிறார்கள்!

* * *

பிரஞ்சு தேசத்தில் ஒரு இளைஞன் தன்னிடமுள்ள அற்புத சக்தியால் தன்னிடமிருந்து விஷ அலைகளைப் பரப்பி எதிரிகளைத் தாக்கும்படி செய்வதாக குற்றம் சாட்டப்பட்டு ஆராய்ச்சி சாலைக்கும் அழைத்துச் செல்லப்பட்டான். அவன் தேகத்தைப் பரிசோதித்ததில் அத்தகைய சக்தி அவனுக்கு இருப்பதாகக் கூறப்பட்டது.

* * *

ஆனால் இந்தியாவிலோ ஒருவித சக்தியுமில்லாமல், வகுப்புவாத விஷ அலைகளைப் பரப்பிக் கொண்டிருக்கும் ஆசாமிகள் கொடியவர்களா, அல்லது மேற்சொன்ன பிரஞ்சுக்காரனே கொடியவனா என்று வேதாளங் கேட்க, மேற்சொன்ன மூவர்களைச் சட்டை செய்து பிரபலமாக்கும் நாம்தான் கொடியவர்களென்று விக்கிரமாதித்தன் சொல்ல, வேதாளம் கட்டவிழ்த்துக் கொண்டு முருக்கமர மேறிற்று.

# வார நடப்பு

கல்கத்தா கூட்டத்தில் நியமிக்கப்பட்ட காங்கிரஸ் அரசியல் திட்டக் கமிட்டி வேலை செய்யத் தொடங்கிற்று. அக்கமிட்டி சென்ற இரண்டு மூன்று நாட்களாக காங்கிரஸிலிருந்து லஞ்சம் துர்நடத்தை முதலியவைகளை ஒழிக்க, காங்கிரஸ் திட்டத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்ய கூடி ஆலோசித்து வருகிறது. காந்திஜிகூட திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்ய முன்வந்திருக்கிறார்.

காங்கிரஸின் சமஸ்தானக் கொள்கை எப்படி இருக்குமோ வென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது காந்திஜி சமஸ்தான ஜனங்களை ஓர் புதிய முறையைப் பின்பற்றும்படி உபதேசிக்கிறார். தன் அனுபவத்திலிருந்தும், ராஜ்கோட் சம்பவங்களிலிருந்தும், காந்திஜி தன் முறையே மாற்றிகொண்டதாகத் தெரிவிக்கிறார். சமஸ்தான ஜனங்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை விட்டுவிடவேண்டும் என்று வற்புறுத்துகிறார். அதிகாரிகளைத் திருப்தி செய்தேதான் தங்கள் பக்கம் திருப்பிக்கொள்ளவேண்டும் என்று போதிக்கிறார். இப்படி சமஸ்தான ஜனங்களின் சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படி அவர் கூறியதற்குக் காரணம், சமஸ்தான ஜனங்கள் அவ்வியக்கத்தை அனுசரிக்கத்தக்க நிலைமையை யடையவில்லை என்பதுதான் என்று தெரிவிக்கிறார். இப் புதிய ஒளி சமஸ்தான ஜனங்களுக்கும் அவர்களை ஆளும் மன்னர்களுக்கும் ஓர் புனிதமான வெளிச்சத்தைக் கொடுத்து வழிகாட்டுமா?

ஐக்கிய மாகாணத்தில் இருந்துவரும் ஷியா-ஸுன்னி சச்சரவை ஒழிக்க பல பிரமுகர்கள் முன் வந்திருக்கிறார்கள். மௌலானா அபுல் கலாம் ஆஸாத், முகம்மதியர்களுக்குள் ஒற்றுமையில்லாததைப்பற்றி மனம் வருந்தி, தான் முன் நின்று அவர்களுக்கு ஒரு சமரஸத்தைச் செய்து முடிக்கப் போவதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்; ஷியாக்கள் நடத்திவரும் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறார். இவரைப் போல் இன்னும் 20 பிரபல முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்ட அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்கள். சர்க்கார் தலையிடாமலே அவர்களே சமரஸமடைவது தான் உத்தமம் என்று ஷியாக்களுக்கு புத்திமதி கூறுகிறார்கள்.

பம்பாயில் ஜவஹர்லால் நேருவின் தலைமையின்கீழ் நேஷனல் ப்ளான்னிங் கமிட்டி வேலை செய்யத் தொடங்கிற்று. சென்னை தொழில் மந்திரி ஸ்ரீ வி. வி. கிரி கூட்டத்தில் ஆஜராகி இருக்கிறார். பல விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய உதவிக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

இவ்வாரம் ஐரோப்பாவில் திடுக்கிடும் சம்பவம் ஒன்று நடந்திருக்கிறது: ஒரு பிரிட்டிஷ் நீர் மூழ்கி மூழ்கிவிட்டது. அதில் அகப்பட்டுக்கொண்டவர்களை ரக்ஷிக்க செய்யப்பட்ட முயற்சிகள் வீணாயின. எனவே, 99 பேர் மாண்டனர். இது சம்பந்தமாக காமன்ஸ் சட்டசபையில் சேம்பர்லின் விபரமான ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

ஸோவியத்தின் ஆமோதிப்புக்காக மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்ட ஆங்கிலோ-பிரெஞ்சு ஒப்பந்தம் திரும்பவும் லண்டன் வந்து சேர்ந்தது. பொதுவாக அவ்வொப்பந்தத்தை ஸோவியத் ஆமோதித்ததாகத் தான் செய்தி கூறுகிறது. ஆனால் பால்டிக் சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என்பது ரஷ்யாவின் கோரிக்கை என்று தெரிகிறது.

பிரிட்டிஷார் இதற்குத் தகுந்தபடி நடந்துக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

போப் உலகத்தில் சமரஸம் ஏற்படுத்த பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, போலந்து தேசங்களின் பிரதிநிதிகளின் மகாநாடு ஒன்று கூடவேண்டும் என்று தெரிவிக்கிறார். இந்த அபிப்ராயம் ரஷ்யா ஐரோப்பாவில் தலையிடுவது உசிதமல்ல என்ற எண்ணத்தாலோ என்று யோசிக்கத் தகுந்ததாக இருக்கிறது.

இது இப்படி நிற்க, ஹிட்லர் சீறி விழுகிறார். பிரிட்டன் செய்துவரும் ஆக்கிரமண எதிர்ப்பு முயற்சிகள் எல்லாம் அவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை என்பதை நன்றாகக் காட்டிக் கொள்ளுகிறார். "இந்த பூச்சி மிரட்டலுக்கு எல்லாம் நாங்கள் பயப்படுபவர்கள் அல்ல" என்று தைரியமாக போடுகிறார்.

# விதி

எழுதியவர் :
ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி

மொழி பெயர்த்தவர் :
ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்

(4)

பல வருஷங்கள் இடைவிடாமல் உழைத்தான்; ஏழைகளுக்கும் தாழ்ந்தோருக்கும் சுயநலமற்ற தொண்டு செய்தான். அதனால் முத்துவுக்கு உலகானுபவம் ஏற்பட்டது; துக்கத்தின் அளவும் தெரிந்தது; முத்துவின் மனம் விரிந்தது. அவனுக்கு முப்பத்திரண்டு வயது.

கடைசியாக திருச்சி ஸிவில் சிறையில் அவன் பூரணமான ஆத்ம விரிவையும், ஏழைகள் துக்கத்தைக் கண்டு இரங்குந் தன்மைக்கு ஒரு ஆறுதலையும் கண்டான். ஆனால் அந்த நிலைமைக்கு வந்ததற்காக அவன் வருந்தவில்லை. மகா பாரதத்தைப் படித்துச் சிறையில் பொழுதைப் போக்கினான். சில சமயங்களில் அழகிய சுலோகங்களை உரக்கப் பாடக்கூடப் பாடுவான். ஒரு நாள் இரவு வெகு நேரம் பாரதத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அவன் மனது அலைந்தது. கனவு காணுவது போல தனது ஜீவியத்தை ஆராய்ந்தான். கனவிலிருந்து விழித்துக் கொண்டதும் உட்கார்ந்து பின் வரும் கடிதத்தை எழுதினான்:—

நெ. 912, ஸிவில் சிறை
திருச்சினாப்பள்ளி
7, அக்டோபர்—

அன்பார்ந்த கணபதி,

அன்று நான் என் பாட புத்தகங்களை காவேரி ஆற்றோடு போகவிட்ட பொழுது நீ ஒருவன் தான் கூட விருந்து பார்த்துக் கொண்டிருந்தாய். ஆகையால் பின் நடந்த என் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கேட்க நீ தான் சரியான மனிதன்.

நான் தான் முத்து — உனக்கு ஞாபகமிருக்கிறதா? — என் பெரியம்மா செல்லம் கொடுத்துக் கெடுத்திருந்தாளே — அந்த ஆசாமி. பதினேழு வருஷங்களுக்கு முன் மாயவரத்தில் காவேரிப் படித்துறையில் நின்று கொண்டிருந்தோம். நான் இப்பொழுது திருச்சி ஸிவில் சிறையில் 912 நெ. அறையில் இருக்கிறேன். நாம் அதற்குப் பிறகு சந்திக்கா விட்டாலும் பள்ளிக்கூடத்திலும் காலேஜிலும் நீ வெற்றிமேல் வெற்றியாசப் பெற்றதையெல்லாம் நான் கவனித்துக் கொண்டுதான் வந்திருக்கிறேன். எதிர் பார்த்தபடி நீ எதிலும் முதலாகத் தான் இருந்தாய். வக்கீல் தொழிலில் ஈடுபட்டு நல்ல மதிப்பும் கௌரவமும் பணமும் சம்பாதித்து வருகிறாய் என்று நினைக்கிறேன். நான் உன்னிடம் ஒரு கட்சிக்காரனாக வருகிறேன். விவகார விஷயமாக அல்ல; என் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உன்னிடம் கூறி மனதாற.

என் புத்தகங்களையெல்லாம் சேர்த்து காகிதக் கப்[illegible]கள் போல ஆற்றோடு விட்டேனே அன்று முதல் நடந்ததையெல்லாம் இதோ சொல்லுகிறேன். அடுத்த நாளே அதி காலையில் கிராமத்திற்குக் கிளம்பினேன் — அம்மாவுடனும் சாமான்களுடனும்கூட. முன்போல அல்லாமல் கிராமத்தில் நிம்மதியாகத் தனிமையில் என்பாட்டிற்குக் காலம் தள்ளலாம் என்று போனேன். இனிமேல் ஏழை மக்கள் துயரையும் தேச நிலையையும் கவனியாது, பண்ணையாட்களிடம் கருணையுடன் நடந்து என் தாயையே போற்றி, குல தெய்வத்தைத் தொழுது கடைத்தேறுவது என்று எண்ணினேன். பெயரும் புகழும் கொடுக்கும் கவலையும் வேண்டாம், பொறுப்பும் வேண்டாம். பிறருக்கு உதவி செய்யவும் எண்ணங்கூட இல்லாமல் கவலையற்ற வாழ்வை நடத்துவதென்றே தீர்மானித்தேன்.

மகத்தான சிருஷ்டி நியமனத்தில் நான் எம்மாத்திரம்? வாழ்க்கைக் கடலில் தத்தளிக்கும் ஒரு துளி தானே? செயல்களே ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாதது போலப்பட்டன எனக்கு. அதனால் செய்தது எல்லாம் — நல்லதெல்லாம் தொல்லைகளாகவே முடிந்தன. எண்ணெய்க் குடத்தில் ஊறியிருக்கும் எண்ணெய்

போல என் ஸ்வாபத்தில் இரக்கம் என்பது மட்டும் நிலைபட்டு இருந்தது. ஆகையால் நான் சதா செயலைச் செய்யத் துடித்துக் கொண்டே இருந்தேன். பிறருக்கு நன்மை செய்ய வேண்டுமென்று பொங்கினேன் — அது தான் என் சக்திக்குள் நான் செய்யக்கூடிய ஒரு செயலாக எனக்குத் தென்பட்டது. உலகத்தில் ஒரு பாதி எப்பொழுதும் இடைவிடாமல் நல்லது செய்து கொண்டிருந்தால், மற்றொரு பாதி சதா அயோக்கியத்தனத்தையே பயின்று கொண்டிருக்கலா மல்லவா ?

மூன்று மாதங்களுக்குமேல் என்னால் இங்கே என்வீட்டில் சும்மா இருக்க முடியவில்லை. பழைய பணியாரம் போல கிராமம் ஊசிப்போய்க் கொண்டிருந்தது. ஒரு தலைமுறையாக அதில் யாரும் சிரத்தையுள்ள ஆளே கிடையாது. ஊர்க்கோவில் ஜீரணமாகி யிருந்தது. வாய்க்கால்கள் மணலடித்து மேடிட்டுப் போயிருந்தன; தெருக்கள் மகா ஆபாஸம்; எங்கு பார்த்தாலும் குப்பைக் குவியல்கள் தான். வெறும் நரகமாகத்தான் இருந்தது. அதை யார் சீர்ப்படுத்துவது? அங்கே ஈசுவர சங்கல்பம் இருந்தது போல் தென்பட்டது அப்பொழுது. நான் வந்து அதையெல்லாம் சரிப்படுத்த வேண்டுமென்று தான் என் படிப்பை நிறுத்தினாரோ அவர்? மந்திர சக்திபோல தூய்மைகொள்ள என் கையைத்தான் இந்தக் கிராமம் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ என்று எண்ணலானேன். வாயில்லாப் பூச்சிகளான கிராம மக்களின் துயரத்தைப் பார்த்ததும் எனக்கு சும்மா இருக்க முடியவில்லை, அந்தக் கிராமத்தை ஒரு சிறு சுவர்க்கமாக்கி அதை என் தாயாருக்கு காணிக்கையாக அளிக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். சுய நல எண்ணமும் தயக்கமு மின்றி வங்காளப் பிரிவினை காலத்தில் இருந்தது போல தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் முன்னேற்ற வேலை செய்ய ஆரம்பித்தேன். கடவுள் என் பக்கம் இருந்தாரென்றே நம்பினேன்.

கிராமமே என்னை உத்சாகப் படுத்தி ஆரவாரம் செய்தது: எல்லோரும் உதவி செய்வதாக வாக்களித்தார்கள். பொதுப் பணிக்கு அவரவர்கள் பங்கு பணத்தைக் கூடக் கொடுப்பதாக ஒத்துக் கொண்டார்கள். காரியங்களை தலையில் போட்டுக் கொண்டு நடத்தக் கூடியவன் நான் தான் என்றார்கள். திட்டம் போட்டு வேலை செய்தேன்.

அந்தப்பழைய இடத்தில் புதுஉயிரைக் கொண்டுவந்து கொட்டினேன், கோவிலில் விளக்கு போட்டேன். எண்ணெயே அறியாத விக்கிரங்கள் எண்ணெயை அடைந்தன. வாய்க்கால்களை வெட்டி மராமத்து நடத்தினேன்; புது வாய்க்கால்கள் வெட்டச் செய்தேன். தெருக்களை யெல்லாம் செப்பனிட்டுச் சுத்த மாக்கினேன். பொது இடங்களில் தென்னை மரம் வைத்துப் போஷிக்கச் செய்தேன். சிறிய சத்திரம் ஒன்று கட்டினேன். கிராமத்துக் குளங்களைத் தூர்வாரி ஆழமாக்கினேன். இதற்கெல்லாம் செலவான பணத்தை நானே போட்டேன்—என் தாயார் பணம்! மகசூலில் தங்கள் பாகத்தைக் கொடுத்து விடுவதாகச் சொன்னார்கள் கிராமத்தார்கள். பெரியம்மாவுக்கு இதெல்லாம் சர்வதா இஷ்டமில்லை. ஆதியிலிருந்தே அவள் ஆட்சேபித்தாள். அநியாயமாக சொத்தை வீணாக்குகிறேன் என்று கத்தினாள். ஆனால் ஒருகிராமத்தைச் சீர்திருத்தி அமைத்து விட்டால் அதில் சுபிக்ஷமும் சந்துஷ்டியும் ஏற்பட்டு விட்டால், மற்ற கிராமங்கள் தானாகச் சீரடையும்—நாடே நலம் பெறும் — அதற்காக தாயார் கோபத்தைக்கூடத் தாங்கலாம் என்று நான் எண்ணினேன். எந்தப் பெரிய முயற்சியில்தான் போக்கிரிகளும் அயோக்கியர்களும் இல்லை? அவர்களை வைத்துக் கொண்டேதான் காரியம் நடத்த வேண்டியிருக்கிறது என்று என்னையே திருப்தி செய்து கொண்டேன்.

மூன்று வருஷங்கள் இந்த வேலையை என் உயிரைக் கொடுத்து செய்தேன்: இருபதினாயிரம் ரூபாயையும் தாரை வார்த்தேன். முக்கால்வாசி என் பெரிய தாயார் பணம். பாவம், தங்கைபிள்ளையின் பித்தைத் திருப்தி செய்வதற்காக இவ்வளவையும் இழக்கச் சம்மதித்தாள். கால்வாசி கடன் வாங்கினேன். இந்த முன்னேற்ற திட்டங்களினால் மிகவும் பயன் பெற்ற ஒரு பெரிய பணக்காரனிடம்தான் ரகசிய

மாகக் கடன் வாங்கினேன். வேலை முடிந்தது. கிராமத்தார்கள் என்னை வாயாறப் புகழ்ந்தார்கள். பணம் மட்டும் கொடுக்கவில்லை. பொது நலத்திற்காகச் செய்ததை வசூலிக்கக் கோர்ட்டுக்கா போவது? அதற்காக மேலும் பணம் செலவழிப்பதா?

எனக்கு வெறுப்புத் தட்டிவிட்டது. ஒரு வருஷம் சும்மா இருந்தேன். தாயார் கோபம் ஒருவாறு அடங்கிற்று. ஆனால் எனக்கென்னவோ தொண்டு செய்யவேண்டும் என்கிற பித்து அடங்கவில்லை. குடிசைத் தொழில்களையும் ஹரி ஜனங்களையும் முன்னேற்றம் செய்துவைக்கா விட்டால் என்ன பிரயோஜனம்? ஹரிஜனங்களுக்கு ஒருகிணறுஆவது தோண்டிக்கொடுக்க வேண்டாமா?—பாவம் கோடையில் காலராவில் கொசுக்கள்போல மடிந்தார்கள்! ஒரு சின்னப் பள்ளிக்கூடம் கட்ட ஏற்படுத்தவேண்டும் என்றும் எண்ணினேன். வேறொருவன் பெயரில் இதெல்லாம் நடத்தினேன்—தாயாருக்குத் தெரியவேண்டாம் என்பதற்காக. ரகசியமாகப் பணமும் கடன் வாங்கினேன். ரகசியமாக அப்படித் தொண்டு செய்ததில் எனக்கொரு திருப்தி ஏற்பட்டது. கிராமமும் சந்தோஷமடைந்தது. ஒரு சுதேசிக்கடையும் வைத்தேன். தினந்தோறும் பத்து வரவு, வியாபாரம் நன்றாக நடந்தது. ஏராளமான பணம் தொலைகிற வரையில் அதை நடத்தினேன். என் நண்பர்கள் என் தொண்டை சிலாகித்துப்பேசி, முதல் தரமான துணி ஒன்று வாங்கிக்கொண்டு போனதற்குப் பணம் கொடுக்கவில்லை. சகோதர மனிதன் உடுத்திக்கொண்டிருந்த துணியைப் பறிப்பதற்காக நான் நியாய சபைக்குப் போவதா? வேண்டியவன் உடலை மூடிக்கொண்டிருக்கும் ஒரு ஷர்ட்டுக்காகவா தாவா போடுகிறது? சீ என்று அதை வெறுத்தேன்.

சுகாதாரத்தைப் பற்றியும் விவசாயத்தைப் பற்றியும் லகுவாகச் சில புத்தகங்களை எழுதி அச்சிட்டு இலவசமாக கிராமத்திலும் சுற்றுப்பக்கத்திலும் வினியோகம் செய்தேன்.

இதற்கெல்லாம் பணம்தானே! சில சமயங்களில் தாயாருடைய சம்மதியுடனும் சில சமயங்களில் இல்லாமலும் கடன் வாங்கினேன். சர்க்கார் போல பணம் கேட்டேன். நண்பர்கள் சந்தோஷத்துடன் தாராளமாகக் கொடுத்தார்கள். கடன் என்றுகூட அவர்கள் சூசனை செய்ய விரும்பவில்லை. "வேண்டுமே ஏதாவது வட்டியென்று ஒன்று" என்று மட்டும் சொன்னார்கள். "இந்த மாதிரியான உத்தம காரியங்களுக்கு உதவி செய்யக் கொடுத்து வைக்கவேண்டுமே! வட்டி மட்டும் நீங்கள் கொஞ்சம் தவறாமல் கொடுத்துக்கொண்டு வந்துவிட்டால் முதலைப்பற்றி கவலையே வேண்டாம் உங்களிடம் இருப்பது கஜானாவில் இருப்பது போல" என்றார்கள்.

வரவர எனக்குத் தொல்லைகள் அதிகமாக ஆரம்பித்தன. என் பரோபகார வேலை எல்லாவற்றையும் நிறுத்தி கடையைக்கட்டவேண்டியதுதான் என்று தீர்மானித்தேன். என் விசாலமனதால் வீடு சத்திரமாகிவிட்டது. ஏழையான சுற்றத்தார்கள் தினமும் இரண்டு வேளைச் சோறாவது சாப்பிட வேண்டிய உரிமை கொண்டாடும் நிலைமை வந்துவிட்டது. என் தாராள சித்தத்தைப் பற்றிய கதைகள் என் தகப்பனார் காதுக்குக் கூடப்போய்விட்டன. திடீரென்று ஒரு பெரிய உத்தியோகஸ்தன் குறுக்கிட்டு அவருடைய வளரும் தொழிலை முளையில் கிள்ளிவிட்டான். அவர் சிரமதசையில் இருந்தார். என்னை உதவிசெய்ய வேண்டினார். நான் அவரைப்பார்த்தது கூட இல்லை தான். அதற்காக என்னைப் பெற்றவரை நான் எப்படி நிராகரிப்பது—அவர்தான் இத்தனை வருஷங்கள் திரும்பிப்பார்க்காமல் இருந்தார் என்றால்? அவருக்கு மூவாயிரம் ரூபாய் கொடுத்து உதவினேன். தகப்பன் பேருக்கு ஒரு ஹானி வந்தால் அது பிள்ளையைச் சேர்ந்ததும் தானே?

இது தெரிந்ததும் என் பெரிய தாயாருக்கு மனது உடைந்து போய்விட்டது. தன் தங்கையைப் படாதபாடு படுத்தின பாவிக்கு நான் ஒத்தாசை செய்வதா என்று அவள் ஆத்திரம் கொண்டாள்.

அவள் சாவதற்குமுன் தன் சொத்து பூராவையும் ஸ்திரீ தனத்தில் வந்தது—ஐம்பது வேலிநிலங்களையும் சத்திரத்திற்கு எழுதிவைத்து விட்டாள். நான்கட்டின

சிறு சத்திரத்தைப் பெரிதாக்கி அதற்கு வைத்துவிட்டாள் பூராவையும். எனக்கு ஒரு கடிதமும் வைத்து விட்டுப்போனாள். "என்கண்ணே, கைக்குழந்தையாய் நான் உன்னை எடுத்து வளர்த்தேன். அது எனக்குப்பெருமைதான். நீ நல்ல தாராள புத்தியுள்ளவன், பரோபகாரிதான். நீ இந்த லோகத்தில் அபூர்வ பிரகிருதி. பணங்காசுக்கும் உனக்கும் வெகுதூரம். அதைச் செலவு செய்துவிட்டால்தான் உனக்கு நிம்மதி ஏற்படுகிறது. சன்னியாசியின் குணம் உன்னிடத்தில் இருக்கிறது. எனக்குப் பிறகு நீ சன்னியாசம் வாங்கிக்கொண்டு விடு. என் சொத்து பூராவையும் அன்னதானத்திற்கு எழுதிவைத்து விட்டேன். உன்லட்சியமேதான் அதில் நன்ருக நிறைவேறுகிறது. நான் நல்லதுதான் செய்திருக்கிறேன், ஆசிர்வாதம்."

இந்தச்சிறு கடிதத்தில் என் வாழ்க்கையையே சாரமாக எழுதிவிட்டாள் என் தாயார். அவளுக்கு உத்தரக்கிரியைகளை நன்ருக நடத்தினேன். ஊரில் இன்னும் இருந்த கொஞ்சம் நாணயத்தைக்கொண்டு பணம் புரட்டி கோலாஹலமாக நடத்தினேன்.

ஐம்பதுவேலிகளும் என்னைவிட்டு அகன்றதைக் கண்டதும்தான் என் கடன்காரர்கள் என் உடலைப்பற்ற முன்வந்தார்கள். கிருஸ்துவைப்போல சரீரத்தை நானுகவே அவர்களுக்கு அர்ப்பணம் செய்தேன். 92 நெம்பரில் இருப்பது எனக்கொரு பெருமையாக இருக்கிறது. இந்தச் சிறைவாழ்க்கை இன்னும் ஒரு மாதம் பாக்கி இருக்கிறது. நவம்பர் ஏழாம் தேதியன்று விடுதலையடைகிறேன். உடனே மைலாப்பூருக்கு வந்து உன்னைப் பார்க்க உத்தேசித்திருக்கிறேன்—ஹிருஷிகேசம் பதரி போகும் வழியில்.

உன் அன்புள்ள

முத்து

அடுத்த வாரம் முத்துவுக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதை அவன் ஆவலுடன் உடைத்து பின்வருமாறு படித்தான்:

நெ. 913 கிரிமினல் சிறை

திருச்சி.

அன்பார்ந்த முத்து,

சென்னை மார்க்கமாக உன் கடிதம் இப்பொழுதுதான் என் கைக்கு வந்தது. அதைப் போன்ற மதிப்பற்ற மனித உணர்ச்சி சித்திரத்தை நான் படித்ததில்லை. ஆமாம், நீ பாடபுத்தகங்களை ஆற்றில் மிதக்கவிட்ட அன்றே நானும் மனிதனுனேன். உடனே நான் உன்னைக் குருவாக வரித்தேன். வாழ்க்கை ரகசியத்தையும் அதன் உண்மையான மதிப்பையும் அறிய வேண்டும் என்ற வேட்கை என்னை ஆட்கொண்டது. அது என்னுள் அதிகமாகி ஊறிக்கொண்டே வந்தது.

காலேஜ் படிப்பை எளிதாக முடித்தேன். நான் வக்கில் தொழிலை ஆரம்பித்த சமயம் நாட்டின் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. வக்கில் தொழிலை ஆரம்பித்த ஒரு வாரத்திற்கெல்லாம் ஓர் அமானுஷ சக்தியின் அழைப்பிற்கிணங்கி தேச சேவையில் ஈடுபட்டேன். வீட்டையும் வாசலையும் விட்டுவிட்டு காந்திஜியைப் பின் பற்றினேன். சிறையே சிலசமயங்களில் உயர்ந்த வீடும் வாசலுமல்லவா? நீ சொத்தை எதிர்த்துக் கிளம்பினுய். நான் சமூகத்தை எதிர்த்துக் கிளம்பியிருக்கிறேன். நம்மிருவருக்கும் பொருத்தமாகத்தான் பக்கத்தில் பக்கத்தில் இடம் கிடைத்திருக்கிறது. நடுவில் ஒரு உயர்ந்த சுவர்தான் சிறுவராக ஒன்ருக இருந்தோம். நாட்டினர் என்ற முறையில் நம்மை ஈசுவரன் பிரித்துவைக்கவில்லை. நானும் ஏழாம் தேதி தான் விடுதலை பெறுகிறேன்; மறுபடியும் நாம் சந்திக்கிருேம். இந்தத் தடவை அதே காவேரிக்கரையில்—இன்னும் மேலே—சந்திக்கிருேம்—பதினேழு வருஷங்களுக்குப் பிறகு!

மறுபடியும் அவளுடைய குழந்தைகள் போல அவளுடைய காலடிக்கரையில் நின்று ஒரு வேலைத்திட்டம் போடுவோம்! —உலகத் தொண்டிற்கும் கடவுள் பணிக்கும்! அவள் நமக்கொரு புதுவழி காட்டுவாள்!

உன் அன்புள்ள,

எஸ் கணபதி.

# ஐக்கிய நாணயச் சங்கங்களும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளும்

(பாலு)

ஐக்கிய நாணயச் சங்கங்களின் சீர்திருத்தத்துக்காக நமது மாகாண சர்க்கார் ஸர். டி. விஜயராகவாச்சாரியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கமிட்டி ஏற்படுத்தி அக் கமிட்டி இப்போது வேலை செய்ய ஆரம்பித்து விட்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

ஜனங்களின் குடும்ப சௌகரியத்திற்காக ஐக்கிய நாணயச் சங்கங்களும், பெருத்த வியாபாரிகளின் சௌகரியத்திற்காக ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளும் பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. இவைகளுள் ஐக்கிய நாணயச் சங்கங்களின் சௌகரியத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் சர்க்காரால் எடுத்துக்கொண்டுவரும் சிரத்தை ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கிகளில் இல்லை. இதற்குக் காரணம் ஐக்கிய நாணயச் சங்கங்களுக்காக ஏற்படுத்திய சட்டம் மாகாண கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு அவ்வப்போது அவைகள் வேலை செய்து வருவதில் ஏற்படும் குறைகளைக்கவனித்து அதற்காக வேண்டிய சீர்திருத்தங்களைச் சுணங்காமல் செய்வதற்கு மாகாண சர்க்காருக்கே அதிகார மிருக்கிறது.

ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளோ இம்பீரியல் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனீஸ் ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலை செய்து வருகின்றன. இச்சட்டத்திற் குட்பட்டு ஒவ்வொரு பாங்குகளிலும் விதிகள் ஏற்படுத்தப்பட்டு அதன்படி வேலை செய்யும்போது பல அசௌகரியங்கள் இருப்பது அனுபவத்தில் தெரிந்தாலும் அந்த அசௌகரியங்களை சட்ட விரோதமில்லாமல் சுலபமாய் நிவர்த்தி செய்வதானது முடியாத காரியமாய் இருக்கிறது. இச் சிரமங்களை உணர்ந்து அவைகளை நிவர்த்திக்கும் பொருட்டு சட்டத்தை மாற்றும்படி பத்திரிகைகள் மூலமாகவோ, அல்லது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட இம்பீரியல் அசெம்பிளி மெம்பர்கள் மூலமாகவோ பிரசுரம் செய்தால் அதற்குப் பொது ஜனங்களின் ஆதரவும் மற்றுமுள்ள அசெம்பிளி மெம்பர்களின் ஒத்தாசையும் சுலபமாய்க் கிடைக்கக்கூடியதாயில்லை. இதற்குக் காரணம் இவ்விஷயங்களை ஆராய்ச்சி செய்து குறைகுணங்களைத் தெரிந்தவர்களின் சங்கியை மிகவும் குறைவாக இருப்பதுதான்.

தேசத்தின் செல்வப் பெருக்குக்காகவே ஐக்கிய நாணயச் சங்கங்களும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளும் ஏற்பட்டவை. தேசத்தின் செல்வப்பெருக்கமானது ஜனங்களின் க்ஷேமத்தையும் வியாபாரத்தின் அபிவிருத்தியையும் பொருத்ததாக விருக்கிறது.

ஜனங்களின் க்ஷேமமானது அவரவர்களின் யோக க்ஷேமத்தைக் கஷ்டமில்லாமல் நடத்திக்கொள்ளக் கூடிய இயல்பைப் பொருத்தது. மிராசுதார்களுக்குத் தேவையுள்ள காலத்தில் சுலபமான வட்டிக்குக் கடன் கொடுத்து உதவுவதும், ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையாயுள்ள உணவு பதார்த்தங்களை மொத்தமாக வாங்கி அவரவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு விதித்து எடுத்துக்கொள்ளும்படிக்கும், சிறுகச் சிறுகக் கிடைக்கும் பணத்தைச் சேமித்து ஓர் மொத்த தொகையாகச் சேர்த்து வைக்கும்படிக்கும், இன்னும் குடும்பார்த்தமான காரியங்களைச் செய்ய வேண்டியதற்கும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் வேலை செய்து வருகின்றன.

பெருத்த வியாபாரிகள் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மொத்தமாகச் சரக்குகளைத் தருவிக்கவோ அல்லது ஏற்றுமதி செய்யவோ இவைகளுக்கு வேண்டிய ஒத்தாசை ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகள் செய்கின்றன. இம்மாதிரி வியாபாரிகளுக்கும் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்

குகள் செய்துவரும் ஒத்தாசை பலவிதமாயுள்ளது.

ஆகவே இவ்விரண்டு வித பாங்குகளும் சரிவர வேலை செய்து வந்தால்தான் தேசத்தின் க்ஷேமம் விருத்தியடையும். ஐக்கிய நாணயச்சங்கங்கள் வேலை செய்வதற்கு சர்க்காரால் பாராட்டத்தக்கதான நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். முக்கியமாய் ஒரே விதமான இரண்டு பாங்குகள் ஒரு இடத்தில் ஸ்தாபனம் செய்து வேலைசெய்ய சர்க்கார் இடங்கொடுக்கமாட்டார்கள். அதனால் இம்மாதிரி ஸ்தாபனங்கள் தங்களிஷ்டப்படி வட்டியையோ அல்லது அதிக வரும்படி ஜனங்களிடத்தில் அநீதியாகக் கிடைக்கும் படிக்கோ செய்ய முடியாது. ஏனெனில் ஒவ்வொரு காரியத்திற்கும் ஓர் வரையறை கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இச்சங்கங்களைக் குறிப்பிட்ட காலங்களில் அடிக்கடி வந்து பரிசோதனை செய்யவும், விஷயங்களைத் தெரிவிக்கவும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப்பட்டு வேலைசெய்து வருகிறார்கள். இச்சங்கங்களில் கணக்குகளும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாலேயே பரிசீலனை செய்யப்பட்டு அவர்களின் உத்தரவாதத்துடன் வெளியிடப்படுகின்றன.

இவ்வளவு நிபந்தனைகள் இருந்தும் வேலை செய்வதில் பலவிதமான ஊழல்களும் குறைகளும் இருக்கின்றன. இவைகளை மறுபடியும் எவ்விதமாகச் சீர்திருத்தம் செய்யலாமென்று ஆலோசனை செய்வதற்காகத்தான் மேற்சொன்ன ஸர். டி. விஜயராகவாசாரியார் கமிட்டி நியமனம் செய்யப்பட்டு வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது.

ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகள் தற்காலம் வேலைசெய்து வருவதில் பலவிதமான குறைகளிருக்கின்றன. இவைகள் இன்ன இன்னவென்றும் எவ்விதமான சீர்திருத்தங்கள் தேவை யென்றும் இதுசம்பந்தமாய் அனுபோகமுள்ளவர்கள் யோசனை செய்து பத்திரிகைகளில் பிரசுரித்திருக்கிறார்கள்.

ஒரு மனிதனுக்கு இரண்டுவிதமான வியாதி ஏககாலத்தில் இருந்தால் ஒரே காலத்தில் இரண்டு வியாதிக்கும் சிகிச்சை செய்தாலொழிய அம்மனிதனுக்கு சௌகரியமில்லை. அதுபோல தேசத்தின் செல்வநிலையை அபிவிருத்தி செய்வதற்காகவுள்ள இரண்டுவித ஸ்தாபனங்களில் ஒரு ஸ்தாபனத்தின் சீர்திருத்தத்தை மாத்திரம் கவனித்து மற்றொரு ஸ்தாபனத்தைப்பற்றி யோசியாமல் இருந்தால் முக்கியமான கருத்தாயுள்ள செல்வநிலை அபிவிருத்தியானது பூர்த்தியாகாது. ஆகையால் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளின் சீர்திருத்தத்திற்காகவும் இதே சமயத்தில் ஓர் கமிட்டி ஏற்படுத்தி அவைகளின் குறைகளை விசாரித்து வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியது முக்கியமானது. ஆனால் இது சம்பந்தமாய் மாகாணசர்க்கார் ஏகதேசத்தில் ஒன்றும் செய்யமுடியாது. இம்பீரியல் கவர்ன்மெண்டாரை இவர்கள் தூண்டுதல் செய்ய வேண்டும். ரிசர்வ் பாங்க் கவர்னர் சமீபத்தில் தங்களால் ஷெடியூல்ட் பாங்குகளுக்குத் தகுந்தவாறு ஒத்தாசைசெய்ய சட்டம் இடங்கொடுக்கவில்லை யென்றும், சட்டத்தில் வேண்டிய மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இம்பீரியல் கவர்ன்மெண்டார் ஓர் கமிட்டியை இதற்காக நியமனம் செய்வார்களென்றும் காணப்படுகிறது. அக் கமிட்டியானது ரிசர்வ் பாங்க் ஆக்டை மாற்றுவதைப்பற்றி யோசிப்பதோடு கூட இண்டியன் கம்பெனீஸ் ஆக்டையும் அந்தந்த மாகாணத்தின் சௌகரியத்திற்குத் தகுந்தவாறு மாற்ற ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்போதுள்ள கம்பெனீஸ் ஆக்ட்படி புதிதாக ஸ்தாபிக்கப்படும் ஜாயிண்ட்ஸ்டாக் பாங்குகள் ரூ. 50,000க்கு குறையாத முதல் தொகை செலுத்தப்பட்டனவையாயிருக்க வேண்டுமென்ற நிபந்தனையிருக்கிறது.

ரிசர்வ் பாங்க் ஆக்டின்படி முதல் தொகையும் க்ஷேமநிதியும் சேர்ந்து 5 லக்ஷம் ரூபாய் இருந்தாலொழிய ரிசர்வ் பாங்கின் ஆதரவு கிடையாது. அதாவது, 5 லக்ஷம் ரூபாய் முதல் உள்ள பாங்குகளைத்தான் ஷெடியூல்ட் பாங்குகளாகச் 'சேர்த்துக்கொள்ளப்படுமென்று இருக்கிறது. ஆகையால் அந்தத்தொகைக்குக்குறைவாக விருக்கும் பல பாங்கு

களுக்கு ரிசர்வ் பாங்கின் ஒத்தாசைகிடை யாது. ஜனங்களுடைய சௌகரியத்திற் கும் நம்பிக்கைக்கும் ரிசர்வ்பாங்கின் ஆதரவு இருக்கிறது என்றால் மனதுக்கு ஓர் சமாதானம் ஏற்படும். பாங்குகளின் சௌகரியத்துக்காக வென்று ரிசர்வ் பாங் கை ஸ்தாபித்து விட்டு, ஒரு சில பாங்கு களை மாத்திரம் அவர்களின் ஆதரவின்கீழ் வைத்து, மற்றவைகளை அவற்றோடு சம் பந்தப்படாமல் வைப்பது மிகவும் அனு சிதம் அன்று. எல்லா பாங்குகளையும் ரிசர்வ் பாங்கின் ஆதரவின் கீழ் கொண்டுவரும் படி சட்டத்தைமாற்ற வேண்டும். இல்லா விட்டால் ரிசர்வ் பாங்கின் ஆதரவின்கீழ் வரும்படி சில்லரை பாங்குகள் தங்கள் முதலை அதிகரித்துக்கொள்ள வேண்டு மென்ற நிபந்தனை சட்டரூபமாகச் செய்ய வேண்டும். கம்பெனீஸ் ஆக்டானது ரிசர்வ் பாங்க் ஆக்டையும் அனுசரித் திருக்க வேண்டும்.

---

## கட்டுரையாளருக்கு

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரை களும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும்.

நமக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங் களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும் படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப் பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரி வித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தை யும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.




மைலாப்பூர்

ஆயுர்வேத வைத்தியசாலை.

லஸ், மைலாப்பூர்.

(போஸ்டாபீசுக்கு எதிரில்)

முன்பு ஷோரனூர் K. A. S. ஆஸ்பத்திரியில் 10 வருஷகாலமாக வைத்தியராக இருந்த டாக்டர் P. S. ராமநாதய்யர் அவர்கள் ரோகிகளை பரிசோதித்து தக்க சிகிச்சை செய்வார்.

எங்களிடம் மலையாளத்திலிருந்து தயாராகி வரும் தைலங்கள், லேகியங்கள், கிருதங்கள் முதலான எல்லா ஆயுர்வேத மருந்துகளும் ஸரஸமான விலைக்கு கிடைக்கும்.

## ஹிந்தி-தமிழ் ஆசான்

இப்புஸ்தகத்தின் உதவியினால் இரண்டு மாதத்திற்குள் ஹிந்துஸ்தானி பேசக் கற்றுக்கொள்ளலாம்.

புஸ்தகத்தின் விலை ரூ. 1-4-0
தபால் செலவு ரூ. 0-4-0

புஸ்தகம் கிடைக்குமிடம் :—

ம. ரா. அப்பாதுரை, புஸ்தக வியாபாரி
57, ஆண்டர்சன் வீதி, எஸ்பிளனேட்,
மதறாஸ்.

# ரிக்ஷா

(ஸ்ரீ ரா. ஆறுமுகம்)

"அம்மா! அம்மா!!.........ஐய,..... அம்மா!!!"

"என்னடி கயிதை, பேசாமெ மொள காயெ அறைக்கமாட்டியா? சும்மா அம்மா அம்மான்னு...... ..."

"இல்லேம்மா, அங்கே பாரேன். யாரு வர்ரதுன்னு!!

தாயார் திரும்பிப் பார்த்துவிட்டு, "ஓஹோ, ஒங்க அப்பன் வந்தாச்சா. இன்னமே ஒம்பாடு ஏகப்பாடுதான்" என்று கடுகடுத்தாள்.

"எம்மா ஒனக்கு இம்மாங் கோவம் வருது, அப்பாவைக் கண்டா?"

"சர்த்தாண்டி. மகா அப்பனைக் கண்டுட்டவ. சாமி ஒன்னே இப்படி வச்சிருக்கும்போதே இந்தக் குதி குதிக்கிறே. இன்னம் ஊரைப்போலெ ஒரு நல்ல அப்பன் கிப்பன் கிடைச்சிருந்தா.............அடேயப்பா ஒன்னைப் புடிக்க எட்டாளு வேணுமே!"

இதற்குள்ளாக ரிக்ஷாவும் அங்கு வந்து நிற்கவே மருதாயி பேச்சைச் சட்டென நிறுத்திவிட்டு, அடுப்பிலிருந்து பொங்கி வழிந்து கொண்டிருந்த சாதத்தை அகப்பையால் ஆற்றிவிட்டுக்கொண்டிருந்தாள். ரிக்ஷாவை பிளாட்பாரத்தின் ஓரமாக நிறுத்திவிட்டு அதன் கீழ்த் தட்டிலேயே மிக்க களைப்போடு 'உஸ்' என்று அமர்ந்தான் முத்தையன். நிலவு பால்போல் காய்ந்துகொண்டிருந்தது. எப்போதும் இரவு 10 மணிக்குத் திரும்பி வரும் அவன் இன்று வழக்கத்திற்கு மாறாக 8 மணிக்கே வந்துவிட்டான். அவனைத் திரும்பிக் கூடப் பாராமல் மருதாயி அடுப்பைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அவளுடைய 8 வயது பெண் மிளகாய் அரைத்துக் கொண்டிருந்தாள். — இல்லே, குழவியை இழுத்து அரைக்கக் கூடச் சக்தியில்லாமல் அதை உருட்டிக்கொண்டிருந்தாள். களைப்போடு வந்த முத்தையன் வியர்வையால் நனைந்து போயிருந்த சட்டையைக் களைந்து விட்டு உடம்பெல்லாம் துடைத்துக்கொண்டே "சுப்பு, கொஞ்சம் தண்ணி கொண்டாம்மா குடிக்க" என்றான். எந்த சமயத்தில் எழுந்து ஓடலாமென்று எதிர் பார்த்திருந்த அச்சிறுமி குபீரென ஓடி ஒரு தகரக் குவளையை எடுத்து பானையிலிருந்து தண்ணீர் மொண்டு அவனிடம் கொடுத்துவிட்டு வண்டியைப் பிடித்துக் கொண்டே அவனருகில் நின்றாள். ஒரு குவளை தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டு "அப்பாடா" என்று அவளிடமே திருப்பிக் கொடுத்துப் புன்னகை புரிந்துகொண்டே மருதாயி பக்கம் கையைக் காட்டி ஏதோ சாடைகள் செய்து கேட்டான். சிறுமிக்கு ஒன்றும் விளங்காமல் "என்னப்பா, அம்மாளா........" என்று திகைத்தாள்.

"உஸ், சத்தம" என்று அவள் வாயைத் தன் கையால் பொத்திக்கொண்டே மருதாயியைக் கடைக்கண்ணால் நோக்கினன். அவளும் இவனைக் கள்ளத்தனமாகப் பார்த்தாள். ஆனல் அவள் முகத்தில் கோபம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. இவனே அதைக்கண்டும் பாராதவன் போல பாவனை செய்து கொண்டான். ரிக்ஷாவின் பெட்டியைத்திறந்து அதிலிருந்து ஒரு சிறு துணிப் பொட்டணத்தை எடுத்து சுப்புவிடம் நீட்டி, "இந்தா இதை ஒங்கம்மா கிட்டக்குடு. நல்ல மீனு; பொடிக்குஞ்சு; இப்பவே கொளம்பு வைக்கச் சொல்லு" என்றான். அவளும் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்துக் கொண்டே ஓடிப்போய் மருதாயியிடம் கொடுத்தாள்

"என்னடி, இது?' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

"மீனும்மா. அப்பன் குடுத்தாச்சு......"

"அடேயப்பா இந்த தங்கமெல்லாம் எங்கிட்டயா பலிக்கும். என்னையா சமாதானப் படுத்துராங்க. நீ வண்டி

அங்கே போனே? உன்னை மொளகா அறைக்கச் சொன்னேனா? அங்கேபோயி நிக்கச் சொன்னேனா" என்று சொல்லிக் கொண்டே கையிலிருந்த அகப்பையை ஓங்கினாள்.

அதற்குள் முத்தையன் ரிக்ஷாவிலிருந்து இறங்கி ஓடிவந்து அகப்பயை அவள் கையிலிருந்து வெடுக்கெனப் பிடுங்கி வீசி எறிந்து, "சீ, என்னடி இது? சிறு புள்ளைய மொரட்டுறியே. அதாலே எப்படி அவ்வளவு மொளகாயும் அறைக்க முடியும்? ஒனக்கு முடிஞ்சா செய்யி, இல்லாட்டி சும்மா கிட......" என்றான்.

"அடடா, பொண்ணுக்கு எத்தாக்கிட்டு வந்திட்டியோ. அப்பனைப்போலத்தானே யிருக்கும் அதுவும்."

"இப்ப என்னத்தடி கண்டுட்டே; நாள் முச்சூடும் வண்டி வலிச்சு வலிச்சு, பேஜாரா போயி இங்கே வந்தா, இந்தச் சனியனோடே ஒரு நாளைப் போலே போரு குடுக்கச் சரியாப்போகுதே......"

"ஆமா, ஆமா. நான் சனியனுத்தான் தெரியும் ஒனக்கு. ஒன்னிஷ்டம் போலேயே தெனம் சம்பாதிக்கிறதெல்லாம் கள்ளுக்கடையிலே கொட்டிட்டு வர வர நானு பேசாமெ இருந்தா ஒனக்குச் சந்தோசமாயிருக்கும்......"

"சீ சீ, கயிதை, கம்மனுட்டி. மூடு வாயை" என இறைந்தான். "இரு இரு, ஒன் ஞாயத்தை அந்த அண்ணங்கிட்டயே சொல்லிப் பாக்கலாம்" என்று கூறிவிட்டு அவள் எழுந்தோடி பக்கத்துத் திண்ணையிலிருக்கும் மற்றொரு ரிக்ஷாக்காரனை கூட்டி வந்தாள். "அண்ணாத்தே ஒன் மச்சான் ஒழுங்கைக் கேட்டியா. இந்த மூணுநாளா வூட்லே ஒரு பைசாக்கூடக் குடுக்கிறதில்லே. தெனமும் ராத்திரிலே கள்ளைக் குடிச்சிட்டு வந்து ஆட்டம் போட்றது தான் பெரிசாயிருக்கு. இந்தமாதிரி இருந்தா எப்புடிக் குடுத்தனம் நடக்கிறது? என்னமாவது சொன்னாக்க கோவம்மாத்ரம் மூக்குமேலே வந்து அடிக்கத்தான் தெரியுது......"

வந்தவன் முத்தையனைப் பார்த்து "ஏண்டா முத்தா, அவ என்னடா பண்ணுவா, பொம்மனாட்டி? எதாச்சும் நாலு காசு அன்னன்னைக்கி குடுத்தாத்தானேடா கஞ்சி காச்ச முடியும்..." என்று கேட்டான்.

"அடேபோடா, நீ பெரிய ஞாயம் சொல்லவந்துட்டே. முந்தானேத்துத் தாண்டா மூக்கா ரூபா குடுத்தேன். அதுக்குள்ளேயே எல்லாம் செலவா யிருக்குமா? இத பாரு இன்னிக்கிக்கூட கொஞ்சம் மீனு வாங்கியாந்திருக்கேன். இப்படிவரும்போது போம்போதெல்லாம் கண்ணுலே கண்டதே வேறே கொண்டாந்து போட்டும் இவளுக்குச் சந்தோசமில்லேன்னா நான் என்னடா பண்றது? 'குடிக்கிறேன் குடிக்கிறேன்'னு குதிக்கிறாளே. நம்ம தொழிலுக்கு குடிக்காமே இருந்தா முடியுமாடா ......?"

மருதாயிக்குக் கோபம் வந்துவிட்டது. "அடேயப்பா, இந்த ரெண்டு மீனுக் குஞ்சைக் கொண்டாந்திட்டியே. இதெ ஒரு பெருமையா அந்தண்ணங்கிட்டக் கூடச்சொலலிரு சித்தே" என்றுசொல்லி அந்த மீன் முடிச்சை அவன் முன்னால் வீசி எறிந்தாள். அவ்வளவுதான்; அவனுக்கும் வந்துவிட்டது கோபம்.

"பாத்திபாடா, அவ கொழுப்பை" என்று சொல்லிக்கொண்டே ஓடி பக்கத்தில் கிடந்த ஒரு விறகுக் கட்டையை எடுத்து அவள் தலையில் ஓங்கி ஒரு அடி கொடுத்தான். "ஐயோ! பாவி, கொன்னுட்டானே!" என்று விழுந்தாள். தலையிலிருந்து இரத்தம் நெற்றி வழியாக வடிந்தது. அவள் பெண் ஓடிவந்து மேலே விழுந்து அலறினாள்.

அதே சமயத்தில் தற்செயலாக அந்தப்பக்கம் வந்த ஒரு போலீஸ் சேவகன் அழுகைச் சத்தங்கேட்டு விபரம் அறிந்து முத்தையனைக் கைப்பிடியாகப்பிடித்துக் கொண்டு ஸ்டேஷனிருக்கும் சந்துபக்கம் நுழைந்தான். மருதாயி அதைக்கண்டு "ஐயய்யோ, அண்ணாத்தே, சித்தேபோயிப்பாரேன். தாணாக்கார ஐயாவுக்கு ஏது நாச்சம் குடுத்து அவுங்களைத்திருப்பி இட்டாங்கிரேன்" என்றாள்.

---

# கிரணங்கள்

(ஸ்ரீ எஸ். சுந்தரம்)

பௌதிக சாஸ்திரத்தைப் நாம் பல விதங்களாக பிரிக்கலாம். அப்பிரிவுகளில் முக்கியமானது, இக் கிரணங்களைச் சார்ந்ததே. சாதாரணமாக பௌதிக சாஸ்திரத்திலுள்ள அநேக தத்துவங்களையும், இக்கிரணங்களின் மூலம் அறியலாம். ஒரு ஆர்மோனியப் பெட்டியில் விசை வர்க்கங்கள் இருக்கின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். இப்பொழுது நாம், பிரபஞ்சத்தை ஓர் ஆர்மோனியப்பெட்டியாக நினைத்துக் கொள்வோம். அதில் விசைவர்க்கங்களுக்குப் பதிலாக, நாம், ஒரு கிரணவர்க்கத்தை அடையக் கூடும். இந்தக் கிரணவர்க்கமானது, அலை நீளங்களை ஒட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. "அலை நீளம் என்றால் என்ன?" என்று நீங்கள் கேட்பீர்கள். நீங்கள் எப்பொழுதாவது கடற்கரை சென்று அலைகளைப் பார்த்ததுண்டா? அப்படியானால் நான் சொல்லப்போவது உங்களுக்கு நன்றாக விளங்கும். அலை நீளம் என்றால், ஒரு அலையின் உச்சிக்கும், அதற்கு அடுத்த அலையின் உச்சிக்கும் உள்ள தூரமே. கிரணங்களுக்கும், அலைகளுக்கும், என்ன சம்பந்த மிருக்கிறது என்று நீங்கள் மறுபடியும் வினவினால், நான் ஆச்சரியப்படமாட்டேன். ஏனென்றால், உங்களில் அநேகபேர், இதுவரையில் படித்திருப்பது, 'ஒளிகள் நேர்க்கோட்டில்செல்கிறது' என்பதுதான். ஆனால், அப்படியல்ல நவீன பௌதிகத்தின்படி. கிரணங்கள் நேர்க்கோட்டில் செல்லாமல், அலை ரூபத்தில் செல்கின்றன.

இந்த அலை நீளத்தை, மீட்டர்களிலும் சென்டி மீட்டர்களிலும் அளக்கிறார்கள். ஆனால் மிகச் சிறிய அலைகளின் நீளமானது ஆங்ஸ்ட்ராம் திட்டத்தில் (Angstrom unit) அளக்கப்படுகிறது. ஒரு ஆங்ஸ்ட்ராம் திட்டம், ஒரு சென்டி மீட்டரைவிட 100000000 மடங்கு சிறியது.

இக்கிரணங்களில் பல ரகங்களுண்டு. அவைகளை நாம் பலவிதத்திலும் அடையலாம். புற ஊதாக் கிரணங்களும் (Ultra Violet Rays), குறைந்த சிவப்புக் கிரணங்களும் (Infra Red rays) சூரியனிடமிருந்து எளிதாகக் கிடைக்கின்றன. சில கிரணங்களை நாம் மின்சாரத்தின் உதவியால் அடையலாம். நாம் இப்படி அடையக்கூடியவைகளில் முக்கியமானவை, எக்ஸ் ரே கிரணங்கள் (X Rays), ஒலிபரப்பும் அல்லது ஹெர்ஷ்யன் கிரணங்கள் (Broadcast and Hertzian Rays), கானல் கிரணங்கள் (Canal Rays), காதோட் கிரணங்கள் (Cathode Rays) ஆகும். இன்னும் சில கிரணங்களை, கதிரியக்கப் பொருள்கள் (Radio Active Substances) வெளிப்படுத்துகின்றன.

இப்பொழுது நான் உங்களுக்குப் பல வித கிரணங்களைப் பற்றியும், தனித் தனியாக சொல்லப்போகிறேன்.

முதலில், சூரியனை எடுத்துக்கொள்வோம். பௌதிகத்தின்படி சூரியனின் சூட்டிற்குக் காரணம் குறைந்த சிகப்புக் கிரணங்கள் (Infra Red Rays) ஆகும். இவைகளுக்குச் சூடுகொடுக்கும் கிரணங்களென்ற மற்றொரு பெயரும் உண்டு. இவைகளின் அலை நீளம் சுமார் 21 மீட்டர்கள் முதல் 8000 ஆங்ஸ்ட்ராம் திட்டங்கள் வரையில் இருக்கிறது. நம்முடைய பயிர்கள் வளருவதற்கும் பழுப்பதற்கும் இவைதான் காரணமாகும்.

இவைகளுக்கு அடுத்தாற்போல், நம் கண்ணிற்குப் புலப்படும் வெளிச்ச கிரணங்கள் (Light Rays) இருக்கின்றன. இவைகளின் அலை நீளம் சுமார் 3000 ஆ. தி. யிலிருந்து 4000 ஆ. தி. வரையிலும் பரவுகிறது. நாம் இவைகளால் எல்லா வஸ்துக்களையும் பார்ப்பதால் இவைகளின் உபயோகங்கள் நமக்கு நன்கு தெரியும்.

இவைகளைப்போல், அடுத்ததாக, கிரணவர்க்கத்தில் புற ஊதாக் கிரணங்கள் (Ultra Violet Rays) இருக்கின்றன. இவைகளின் அலை நீளம் சுமார் 4000 ஆ. தி. யிலிருந்து 136 ஆ. தி. வரையிலும் வியாபிக்கிறது. இக்கிரணங்கள், நமக்கு மிகப்பெரிய நன்மைகளைக் கொடுக்கின்றன. இவைகளால் தான் தினந்தோறும், பூமியிலிருக்கும் கோடிக்கணக்கான விஷக்கிருமிகள் கொல்லப்படுகின்றன. இவைகளை வைத்தியர்கள் சிகிச்சை செய்ய உபயோகிக்கிறார்கள். மேலும், மனிதனின் தோல் வெயிலில் கருப்பதற்கு இவைகள்தான் முக்கிய காரணமாகும். இவைகளே இந்தியர்களின் கருப்பு நிறத்திற்கும் பழுப்பு நிறத்திற்கும் காரணம். ஆனால், இவைகள் புழுதியுள்ள இடங்களிலும் அசுத்தமான இடங்களி

லும் பயன்படா. இவைகளுக்கு ஆக்டினிக் கிரணங்கள் (ActinieRays) என்ற மற்றொரு பெயரும் உண்டு.

மனிதனறிந்த அடுத்த கிரணங்கள் எக்ஸ்ரே கிரணங்கள். இவைகள் புற ஊதா கிரணங்களின் பக்கத்திலில்லை. ஆனால் கொஞ்சம் தள்ளியே இருக்கின்றன. இவைகளுக்கும், புற ஊதாக் கிரணங்களுக்கும் மத்தியில் மனிதனறியாத ஒரு பாகமிருக்கிறது. இந்த எக்ஸ்ரே கிரணங்கள், 1895-ம் ஆண்டில், டபிளயூ. வீ. ரான்ஜன் என்னும் ஜெர்மன் பௌதிக நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு நாள் அவர் உபயோகிக்காத ஒரு புகைப்படத் தட்டை தன் ரஸாயன பரீக்ஷை அறையில் வைத்துக்கொண்டு சில சூன்யக் குழாய்களில் பரீக்ஷைகள் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அப்புகைப் படத் தட்டில் சில கோடுகள் காணப்பட்டன. இச்சம்பவத்தை, ஆராய்ந்ததில், அவைகள், சில வித கிரணங்களால் வரையப்பட்டன என்பதை அறிந்தார். இக்கிரணங்கள்தான், பின் காலத்தில் 'எக்ஸ்ரே கிரணங்கள்' அல்லது 'ரான்ஜன் கிரணங்கள்' என்ற பெயரை அடைந்தன. இக்கிரணங்களின் அலை நீளம் மிகச் சிறியது. இவைகளின் அலை நீளம், வெளிச்ச கிரணங்களின் அலை நீளத்தை விட ஆயிரம் மடங்கு சிறியது. இவைகளுக்குள்ளே வித்தியாஸமான அலை நீளங்களோடுகூடிய இரு பிரிவுகளிருக்கின்றன. ஒரு பிரிவிற்கு மிருதுவான கிரணங்களென்றும (Soft Rays), மற்றொன்றிற்கு கடினமான கிரணங்களென்றும் பெயர். கடினக்கிரணங்களின் (Hard Rays), அலைநீளம் மிருதுவான கிரணங்களின் அலை நீளத்தை விட முப்பது மடங்கு சிறியது. எவ்வளவுக்கு எவ்வளவு அலைநீளம் குறைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு கிரணங்களின் கடினம் அதிகப்படுகிறது. இக்கிரணங்களுக்கு, கடின பதார்த்தங்களுக்குள்ளும் கெட்டிப்பதார்த்தங்களுக்குள்ளும் எளிதில் பிரவேசிக்கக்கூடிய சக்தியுண்டு. இவைகளின் உதவியைக்கொண்டு டாக்டர்கள் மனிதர்களின் உடம்பிற்குள் இருக்கும் வியாதிகளைப்பற்றி எளிதில் அறிகிறார்கள். ஆனால், இவைகளை அஜாக்கிரதையாக உபயோகத்தால் டாக்டர்களுக்கே விபத்துகள் ஏற்படலாம்.

மற்றும், மின்சாரத்தின் உதவியால் காதோட் கிரணங்களை அடையலாம். மின்சாரத்தை ஒரு கம்பியின் வழியாகப் பிரயோகித்தால், இருவித நிலைகள் உண்டாகின்றன. ஒரு நிலைக்கு, தனுத்மக வித்யுத்தினால் ஏற்படும் நிலை என்றும் (Positive Potential) மற்றொன்றுக்கு எதிர்மறையின் நிலை (Negative Potential) என்றும் பெயர். இந்த எதிர்மறை நிலைக்கு காதோட் (cathode) என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதிலிருந்து காதோட் கிரணங்கள், காதோடிலிருந்து உண்டாகின்றன என்று நீங்கள் எளிதில் அறியலாம். இவைகளை முக்கியமாக சூன்யக் குழாய் (Vacuum Tul e) களிலிருந்து உண்டாக்குகிறார்கள். இவைகள் கிளம்பும் பொழுது, ஒரு கண்ணாடிக் குழாயின்மீது பட்டால் மிக அற்புதமான, பச்சை, ஊதா, நிறங்களோடு கூடின ஒளிகள் காணப்படும்.

இம்மாதிரியாக தனுத்மகவித்யுத்து ஏற்படும நிலையில் கானல் கிரணங்களைக் (Canal Rays) காணலாம என்று, 1886-ம் வருடத்தில கோல்ட்ஸ்டீன் (Goldstein) என்பவர் கண்டுபிடித்தார்.

ஒலிபரப்பும் கிரணங்களைப்பற்றி அநேகருக்கு தெரிந்து இருக்கலாம். ஆதலால் அவைகளைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டிய அவசியமில்லை. ஆனால், இதைப்போலவே இருக்கும், ஹெர்ஷ்யன் கிரணங்களைப் பற்றி பலருக்கு தெரிந்து இருக்காது. இவைகள் ஹெர்ட்ஸ் (Herts) என்னும் பௌதிக நிபுணரால் கண்டுபிடிக்கபபட்டன. இவைகளின் உதவியைக் கொண்டு, பாரிஸ் நகரத்திலிருந்து, லண்டன் நகரத்திலிருப்பவரிடம் எளிதாகப் பேசலாம்.

முன்னால் கதிரியக்கப் பொருள்கள் (Radio Active Substances) என்று சிலவற்றை பற்றி சொன்னேன். இப்பொருள்களில் முக்கியமானது ரேடியம் என்பது. இதை மாதம் கூரி (Madam Curie) என்ற பிரஞ்சு பெண்மணி கண்டுபிடித்தார். இந்த வஸ்து தன்னிடத்திலிருந்து மூன்றுவித கிரணங்களை வெளிப்படுத்துகிறது. அவைகளின் பெயர்கள், முறையே, ஆல்பா கிரணங்கள் (8 Rays), பீட்டா கிரணங்கள் (β rays), காமா கிரணங்கள் ( rays) என்று ஆகும். இவைகளின் உதவியினாலும் அந்த வஸ்துவின் உதவியினாலும் வைத்தியர்கள் பெரிய பெரிய வியாதிகளைப் போக்குகிறார்கள்.

ஆனால் இவைகளை அஜாக்கிரதையாக உபயோகத்தால வைத்தியர்களுக்கே பேராபத்துகள் ஏற்படும்.

# அறிவாள் மணை

(குஞ்சு)

எங்காத்தில் அவாளுக்குக் குறும்பு ஜாஸ்திதான். தினம் காலையில் ஏழு மணிக்கு உட்கார்ந்தால் ஒன்பது மணி மட்டும் ஏதாவது எழுதிக்கொண்டே இருப்பா. மணி ஒன்பதாச்சோ இல்லையோ, எழுதினதை ஒரு தரம் படித்துப்பார்த்து விட்டு உடனே கிழித்தெறிந்து விடுவா. இதை தினம் பார்க்கப் பார்க்க எனக்கோ ஆச்சரியமாயிருக்கும். அவரோ வழக்கத்தை விடுவதாக இல்லை. ஒரு நாள் அப்படிக் கிழிக்கப்போகும் சமயத்தில் கையைப் பிடித்துக்கொண்டு, "இவ்வளவு சிரமப்பட்டு தினமும் எழுதிக் கிழிக்க வேண்டாம், ஏதாவது பத்திரிகைகளுக்கு அனுப்பினால் உங்கள் சாமர்த்தியத்தை இன்னும் நாலு பேராவது வாசிக்கமாட்டார்களா?" என்றேன். "நான் எழுதுகிறது எனக்கே வாசிக்கப் பிடிக்கவில்லையென்றால், இவைகளை ஊரிலிருக்கறவா வேறே வந்து வாசிக்கப்போகிறார்களாக்கும்" என்று சொல்லி 'நீ வேண்டுமானால் இன்றையிலிருந்து எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பு' என்றார். எனக்கும் வெகு நாளாய் இந்த ஆசையுண்டு. இன்றைக்கு அவாளை உத்தரவு கொடுத்ததும், அவாளைபே எந்த மாதிரி எழுதினால் எல்லோரும் வாசிக்கப் பிரியப்படும்படி இருக்கும் என்றேன். அவர், குறும்பாகவும் எடக்காகவும், "உங்கள் மத்தியான மகா சபையில் அன்றாடம் நடக்கும் சம்பவங்களை வரைந்து தள்ளேன்" என்றார். நானும் அப்படியேதான் எழுதிப் பார்ப்போமே யென்று, இன்று எங்கள் கச்சேரியில் நடந்த விவரங்களை எழுதலானேன்.

கச்சேரி என்றதும், கல்கத்தாவிலும் வம்புக் கச்சேரி வந்துவிட்டது என்றெண்ண வேண்டாம். 'மாமி அப்பளமும்' சாம்பார் பவுடரும் நின்றால்தானே நாங்களாகக் 'கூட்டம் போட்டுக்கொண்டு அப்பளாம் இடப்போகிறோம்! அப்பளம் இடாவிடினும், எங்கும் வம்பர் மகா சபை கூடாமல் மாத்திரம் இருக்காது. கிராமவாசிகள் அப்பளக் கச்சேரி நடத்தினால், நாங்கள் இருபதாம் நூற்றாண்டில் கோம் கச்சேரியோ, அல்லது ஸ்வெட்டர் கச்சேரியோ நடத்தாமல் விடமாட்டோம். எங்களுக்கு அண்டை அயலிலிருந்து ஆள் வரவேண்டியதில்லை. ஒருவர் வீட்டிலிருந்து மற்றொருவர் வீட்டுக்குப் போகவும் முடியாது. கல்கத்தாவில் கதவைப் பூட்டிவிட்டுக் கிளம்பினால், கண்டிப்பாய் வீட்டில் கள்ளன் புகுந்து விடுவான். சின்னச்சம்பளம் வாங்கும் எங்களைப்போன்ற மதராசிகள் அநேகமாய் நாலைந்து குடும்பங்களுக்குக் குறையாமல் ஒரே வீட்டில் வசிப்பது வழக்கம். புருஷர்கள் ஆபீஸுக்குப்போகவேண்டியதுதான் தாமதம். எங்கள் மீட்டிங் 'கோர'த்துக்குக்குறைவில்லாமல் ஆரம்பமாகி விடும். என் வீட்டு மீட்டிங்குக்கு மொத்தம் ஏழு பேர். அதில் ஐந்து உத்தியோகஸ்திகளும் (உத்தியோகஸ்தர் வீட்டுக்காரி) இரண்டு கிழவிகளும் உண்டு. ஒன்று என் மாமியார், இன்னொன்று எதிர்த்த ரூம் கோமதியின் தாயார். அவர்கள் அநேகமாய் எங்கள் சபையில் கலந்து கொள்ளா விடினும், எங்கள் பக்கத்திலேயே தான் மத்தியான வேளையில் படுத்துக் கொள்வார்கள்.

இன்று கச்சேரி ஆரம்பித்தவுடன், என் வீட்டுக்கு ஊரிலிருந்து அபூர்வமாய் வந்த, மாயவரம் பாதிரி மாம்பழத்தை எல்லாருக்கும் கொடுக்கலாம் என்று, நாலு பழத்தையும் அறிவாள் மணையையும் கொண்டு வந்து வைத்தேன். நாங்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமன்னியில் பழகுவோம். 1200 மைலுக்கப்பாலிருந்து வந்திருப்பதால் கிழவர்களும் நட்டாங் கடிக்காமல் எங்களுடன் சரிசமானமாய்ப் பழகினார்கள். மாம்பழத்தைக் கண்டதும் கோமதி அவசர அவசரமாய் எடுத்து நறுக்கப்போனாள். அறிவாள் மணை முதலில் அவள் கையை மாதிரி பார்த்தது; பாதிரிப் பழத்தில் ஆசையினால் ஒவ்வொரு வ[illegible]ன் பார்" என்று

அவரவர் விரல்களில் ஒன்றை அறிவாள்மணைக்கு அறிமுகமாக்கினர். பாட்டிகளும்கூட அப்படித்தான்.

எல்லோருடைய கையிலும் கட்டுப் போட்டவுடன், என் மாமியார் "இது என்னடி மாய அறிவாள்மணை! இதில் ஏதோ சூது இருக்கிறது. இல்லாவிடில இப்படி ஒருவர் பாக்கியில்லாமல் கையை வெட்டாது" என்று ஆரம்பித்தார். கோமதியாத்து அம்மாமியும் அதற்கு முத்திரை வைத்தார். என்ன உத்தியோகஸ்தர்கள் ஸம்ஸாரங்களாய் இருந்தாலும், பெண்டுகள்தானே? எங்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது. அடுத்தரும் அலமேலு கொஞ்சம் வைதீக சிரத்தையுள்ளவள். அதிகமாய் தற்கால நாகரீகத்தில் பிரியமில்லாதவள். ஆத்துக்காரர் ஆறுமணிக்கே ஆபீஸுக்குப் போகவேண்டுமென்றாலும் சமைத்துப் போட்டுவிட்டு சாவகசமாய் தலைபின்னிக் கொண்டு குளிக்கலாமேயென்று இருக்காமல், நாலுமணிக்கே எழுந்திருந்து, ஸ்னானம் பண்ணி, சூரிய நமஸ்காரம், பஞ்சாக்ஷர ஜபம் செய்துவிட்டு எஜமானர் ஆபீஸுக்குப் போவதற்கும் சமையல் செய்து விடுவாள். பாட்டிகள் அறிவாள் மணைச் சந்தேகத்தைக் கிளப்பியதும், அலமேலு சாஸ்திரம் சொல்ல ஆரம்பித்தாள். "ஆத்துக்காரர் சம்பளத்தை வாங்கிப் பெட்டியில் வைத்துக் கொண்டு அவர்களுக்குச் செலவுக்கு எண்ணி எண்ணிக் கொடுக்கக்கூடிய சுவாதந்திரியம் வந்து விட்டதாலும், ஏதோ கையில் கொஞ்சம் காசு புரளுவதாலும் நமக்கே எல்லாம் தெரிந்து விட்டதாக நினைத்துக் கொள்ளுகிறோம். நம்மைப் போன்ற நவநாகரீகங்களை சிருஷ்டித்த பெரியவர்கள், எது வாங்கினாலும் சரி, எந்தக் காரியங்கள் செய்தாலும் சரி, நல்ல வேளை, ராகுகாலம் தியாஜ்ஜியம், சகுனம் தும்மல் இவைகள் பார்த்துச் செய்யவேண்டும் என்று சொல்வது இப்போது பலிச்சுப்போச்சு. எனக்கு நன்றாய்த் தெரியும். குஞ்சு அம்மாமி போன ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில்தான் போய் இந்த அறிவாமணை வாங்கி வந்தார். அதனால்தான் இத்தனை கோளாறுகளும்" என்றாள். கோமதி தான் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருக்கக்கூடாது என்று, "இந்தக் குஞ்சு அம்மாமி, என்ன பத்தாம் பசலியாய் இருந்தாலும், 'ஸோப்பு ஒதவாது, காப்பிஒதவாது, பௌடர் உதவாது, நன்றாக மஞ்சள் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் ஒரொரு சமயம் ஏதாவது இப்படிச் செய்து விடுகிறார். இன்னும் யாராவது வந்தாலும் கையில் பாண்டேஜ் போடும் படியான அறிவாமணையை ராகு காலத்தில் போய் வாங்கி வந்திருக்காரே" என்றாள். கடைசி ப்ளாக் காமாட்சியும் சேர்ந்து கொண்டாள். "இந்தாருங்கோ குஞ்சு அம்மாமி, இந்த அறிவாமணையை இப்பவே கொண்டுபோய் எங்கேயாவது போட்டு விடுங்கள். எங்காத்து ரணமருந்து பாக்கியிருப்பதும் காலியாய்ப் போய்விடப் போகிறது" என்றாள்.

இந்நேரம் மௌனமாய் இருந்த மீனாட்சி தான் சொல்ல வேண்டியதை சொல்லலானாள். அவளுக்குப் பழம் பாட்டி கதையெல்லாம் கட்டோடே பிடிக்காது. நாகரீக ஆசாமி. எங்கள் பேச்சையெல்லாம் கேட்டதும் சிரிக்க ஆரம்பித்தாள். "அவசரத்துக்கு அறிக்கஞ் சட்டி கை நுழையாது என்பது போல், மாம்பழந் தின்கிற அவசரத்தில், புதுக் கூருக்கோடு கூடிய அறிவாமணையென்று பார்க்காமல் நபள் அஜாக்ரதையினால் செய்த காரியத்துக்கு அறிவாள்மணை என்ன பண்ணும், ராகு காலம் என்ன பண்ணும்? நவநாகரீக ஆசாமிகள் வீட்டுக்காரிகளாய் இருந்து கொண்டும்கூட, இந்த வேலை காலம் இதில் நம்பிக்கைவைக்கக்கூடாது" என்று பொறிந்து தள்ளினாள். பாட்டிகள் முதலில் சந்தேகத்தைக் கிளப்பி விட்டு விட்டு, எல்லார் சொல்றதும் சரி, புருஷாள் ஒவ்வொத்தராய் ஆபீஸிலிருந்து வந்து விடுவார்கள் அறிவாமணையையும் மாம்பழத்தையும் உள்ளே வையுங்கள். நாளை ஜாக்கிரதையாய்ப் பார்த்து நறுக்கிக் கொள்ளலாம் என்று சபையைக் கலைத்தனர்.

# மீட்சி

(ஸ்ரீ எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி.)

வாசல் திண்ணையில் உட்கார்ந்த வண்ணம் சந்தியாகால விசித்திரங்களையும், அடுத்து அதை அமுக்கத்தயாராக இருக்கும் இருட்டின் திமிரையும் பற்றி ரொம்ப மும்முரமாக யோசித்துக் கொண்டிருந்தேன். பத்து அடி தூரம் தள்ளி எப்போதும் திறந்து கிடக்கும் கேட்டுக்கதவு; வீட்டைச்சுற்றி முள்வேலி.

அந்திப்பொழுது சாவதானமாகச் சென்று கொண்டிருந்தது.

இருந்தாற்போலிருந்து கொம்பு ஊதும் சப்தம் பிறிட்டு எழுந்தது. யாரோ ஒரு கிழட்டு ஜமீன்தாரிணி காட்டுப்பக்கம் போய்க்கொண்டிருந்தாள்.

மறுநிமிஷத்தில் எங்கிருந்தோ ஓடி வந்த மான் ஒன்று என் வீட்டு முன் வாசலில் நுழைந்தது. அடுத்தவினடி ஒரே துள்ளில் திண்ணைக்குத் தாவி வராண்டாவில்—என் எதிரே நின்றது.

ஏதோ ஒரு பெருத்த அபாயத்திலிருந்து தப்பி ஓடிவந்திருக்கவேண்டும் அது; அதன் உடல்முழுதையும் புழுதியும் சகதியும் பங்குபோட்டுத் தழுவிக்கொண்டு அபாசத்தோற்றத்தை அளித்தன. அது மிரண்ட கண்களுடன், படபடத்துத்துடிக்கும் ஹிருதயத்துடன், என்னை நோக்கி உயிர்பிச்சை கேட்டது.

குலைக்கும் சப்தம்கேட்டது தான் தாமதம், ஒரேதாவில் வராண்டா மூலைக்குப் போய் பதுங்கிக்கொண்டது. சட்டென்று நான் எழுந்துபோய் வெளி கேட்டை மூடிவிட்டு வந்து உட்கார்ந்தேன்.

ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் வாசல் கேட்டில் ஏழெட்டு வேட்டைநாய்கள், கால்களைக்கதவில் பிராண்டிய வண்ணம் ஊளையிட்டுக்கொண்டிருந்தன. சுற்றிலும், ஊர் கிராம வாசிகள் எல்லோரும் கும்பலாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லோருடைய கண்களும் மூலையில் பதுங்கிக்கிடந்த மானையே குறிப்பாக நோக்கின.

தூசியும் புழுதியும் பின்தொடர அழைத்துக்கொண்டு ஒரு வேட்டைக்கார கோஷ்டி என் வீட்டைநோக்கிவந்தது. கிராமவாசிகள் வழிவிட்டு ஒதுங்கவே வேட்டைக்காரர்கள் நாய்களைப்பிடித்துக் கொண்டு நின்றார்கள். அவர்களுடைய தலைவன் குதிரையை விட்டுக்கீழே இறங்கினான். நாய்களின் ஊளையிடும் சப்தம், கிராம வாசிகளின் கசமுசாசப்தம், எல்லாம் அடங்கி நிசப்தம் பரவியதுமறு விநாடியில்.

தலைமை வேட்டைக்காரன் கேட்டுக் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்தான். என்னைப் பார்த்துத் தலைவணங்கிய வண்ணம் கேட்டான். ஐந்து நாய்கள் ஏககாலத்தில் குலைக்கும் சப்தத்தைவிட கொஞ்சம் பலமான குரலுடன் “எங்களுக்கு அனுமதி யளிப்பீர்கள் என்று நம்புகிறோம்” என்று சொன்னான்.

நானும் பதிலுக்கு என்கைகளை அகல விரித்துக்கொண்டே “இல்லை. உங்களை உள்ளே அநுமதிக்க முடியாது” என்று பதில் கொடுத்தேன்.

இம்மாதிரியான பதிலை அவன் எதிர்பார்க்கவில்லை போலிருக்கிறது. அவன் எந்த ராஜாவாயிருந்தால் எனக்கென்ன; அசந்து போய் அப்படியே நின்றுவிட்டான் பிரமித்து.

“என்ன! என்னசொன்னீர்கள்!” அவன் தன் பின்னாலிருந்த பட்டாளங்களை நோக்கி ஆத்திரத்துடன், “நம்மை....... நம்மை உள்ளே விடமாட்டாராம் இவர்!” என்றான்.

அந்தக் கும்பலும் அதே உணர்ச்சியையும் ஆத்திரத்தையும் அடைந்தது. வேட்டைக் கும்பலிலுள்ள பெண்களுக்குத் தான் ரொம்பத் துடிதுடிப்பு. ஒரு கிழவி கத்தினாள் "மரியாதையில்லாமல் பேசுகிறானே இந்தப்பையன்" என்று.

லஞ்சம் கொடுத்தாவது, எப்படியாவது சரிபண்ணிவிட வேண்டுமென்று பேசிக் கொண்டார்கள்.

தலைவன் கேட்டான் "இந்த மானின் மூன்றத்தனை கிரயம் வேண்டுமானாலும் தந்து விடுகிறேன், சரிதானே!" என்று கேட்டு ஆவலுடன் என்னைப்பார்த்தான்.

நான் உதட்டைப் பிதுக்கியதைக் கண்டதும் அவனால் வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

கண்களில் பொறி பறக்க அக்கும்பலிலுள்ளவர்களெல்லோரும் என்னைத் திட்ட ஆரம்பித்தார்கள்.

நிலைப்படியில் நின்றுகொண்டு படையெடுக்கும் அந்த முகங்களையெல்லாம் கூர்ந்து நோக்கினேன். என் தடையால் ஏற்பட்ட கோபம், ஆத்திரம் அவமதிப்புக்கு ஒரு முடிவு செய்ய நினைத்தார்கள் போலும்! என்னைப் பழிவாங்க நினைத்திருந்தால் அவர்கள் எண்ணம் நிறைவேறாமல் போவதன்னியில் பெரிய ஏமாற்றமும் அடைந்திருப்பார்கள் என்பதுமட்டும் நிச்சயம்.

பாய்ந்து ஓடிய மிருகத்தைப் படுக்க வைத்துவிட்டார்கள். அதன் சங்கை நெரிக்கவேண்டியதுதான் இப்போதைய வேலை. ஒருவன் அந்த பலியைப் பார்த்து கொட்டையிட்டுக் கொண்டே அது விஷயமாக உடைந்த குரலில் ஏதேதோ உளறினான் என்னிடம்.

ஒரு கிழவன் இரு கைகளையும் கதவுக் கம்பிகளுக்கிடையில் நீட்டி அம்மானின் கால்களைப் பிடித்து இழுப்பது போல கைகளை பின்னுக்கு இழுத்துக்கொண்டான்.

பெண்கள் புருஷர்களைவிட மகா கேவலமாக நடந்துகொண்டார்கள். மானின் ஞாபகம் அவர்களது வெட்கத்தையும் நாணத்தையும் மறந்து கூத்தாடச் செய்தது. அவர்கள் கூத்தாடியதைக் கண்ட ஒருவன் சகிக்காமல் ஓடி விடுவான்.

அக் கும்பலில் வாய் மூடி பேசாமலிருந்தவை வேட்டை நாய்கள்தான். அவற்றின் வேலை இடத்தைக் காட்டிக் கொடுப்பது. முடிந்து விட்டதல்லவா! மான்மீது அவற்றிற்கும் இரக்கம் பிறந்து விட்டது போலும்!

கிராம வாசிகள் அவர்கள் எதிர்பார்த்தபடி காரியம் நடக்காததால் ஏமாற்றத்துடன் திரும்பிவிட்டார்கள். குழந்தையை இடுப்பில் இடுக்கிக்கொண்டு வேடிக்கை பார்த்த ஒரு ஸ்திரீ வரப்போகும் விபரீதத்தைக் காணச் சகிக்காதவள் போல வேகமாக கும்பலைவிட்டு அகன்று போய்விட்டாள்.

இடுப்பில் ரத்தக் கரை படிந்துள்ள துணிகளுடன், கைகளை கட்டிக்கொண்டு ஒரு மூலையில் அவ்வூர் கசாப்புக் கடைக்காரன் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்தவர்கள், நடக்கப்போகும் குரூரச் செய்கையை அவன், மனக் கசப்புடன் கவனிக்கிறான் என்று தெளிவாகச் சொல்லிவிடலாம்.

வேட்டைக்கார கோஷ்டியின் உறுமல் சப்தம் அதிகரித்தது. எவ்வளவுக்கெவ்வளவு அந்த மிருகத்தை அடித்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று அவர்களுக்கு ஆத்திரமுண்டாயிற்றோ அதேபோல் நானும் அம் மிருகத்தை காப்பாற்றியே தீருவதென்று உறுதி செய்துகொண்டேன்.

அந்த மானைத் திரும்பிப் பார்த்தேன். அதன்மீது இரக்கம், அன்பு, சொரிய ஆரம்பித்தது என் இதயத்தில்.—அந்த நெருக்கடியின் போதும். சில நிமிஷ காலம் என்னால் அதைக் காப்பாற்ற முடிந்ததே என்று நினைத்துச் சந்தோஷப் பட்டேன். எப்பாடு பட்டாவது அதைத் தப்புவித்து விடவேண்டுமென்ற உறுதி உண்டாயிற்று என் மனதில்.

அந்தக் கும்பலை நோக்கி "நான் உங்களை உள்ளே விடமாட்டேன். மரியாதையாக வெளியே போய்விடுங்கள்" என்று எச்சரித்தேன்.

என் பேச்சை அவர்கள் லக்ஷியம் செய்ததாகத் தெரியவில்லை. "எப்படியாவது மானைக் கொண்டுபோய் விடவேண்டும்" என்று ஒரு குரல் உறுமியது. ஆர

வாரத்துடன் பல குரல்கள் அதை ஆமோதித்தன.

ஒரு சிறுவன் "இதோ இந்தத்துப்பாக்கியால் அதைச்சுட்டுவிட்டால்........." என்று கூறி முடிப்பதற்குள்,

"சபாஷ், ரொம்பசரி, ஆகட்டும்!" என்று அனுமதி கிடைத்தது.

மறுவிநாடி துப்பாக்கியை அப்பையன் நீட்டினபோது நான் அதைப் பிடுங்கி உள்ளே எறிந்து விட்டேன்.

"அடமுட்டாள்" என்று கத்தினான் பையன்.

ஆத்திரம் தாங்காமல் கும்பல் உள்ளே புகுந்துவிட்டது. அவர்களை உள்ளே வரவொட்டாமல் கத்தியும், தடுத்தும் நான் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டன. முடிவை எதிர்பார்த்திருந்த மானும் தப்பி ஓட முயற்சி எடுத்துக் கொள்ளாமல் அங்கேயே கிடந்தது.

ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று கீழேகிடந்த, அந்தப்பையனிடமிருந்து பிடுங்கிய, துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மானண்டை ஓடி அதன் அருகில் நின்று கொண்டேன்.

"டபார், டபார்!" என்ற சப்தம்.

மறுநிமிஷத்தில் எதிர்த்து வந்தவர்கள் ஒவ்வொருவராகக் கீழேவிழுந்தார்கள்.

படுகொலை செய்தாவது அந்த வாயில்லாப்பிராணியைக் காப்பாற்றியது மேலான தர்மம் என்று நினைத்துக் கொண்டேன், அந்த 'மிருகத்தின்' பிரகாசமான கண்களைப் பார்த்தபோது.

(ஆங்கிலத்திலிருந்து தழுவியது)

# பழனி கடிதம்

(ஸ்ரீ. ஷண்முக சுந்தரம்)

காட்டுபாளையம்

அன்பார்ந்த தம்பி கருப்பண்ணனுக்கு சொகம் மெம்மேலும் உண்டாகட்டும்.

உனக்கு வெகுகானா ஒரு கடுதாசி எழுதிப் போடலாமின்னு இருந்தேன். ஆனால் எதை எழுதறது என்று மனம் தவியா தவிச்சுது. இந்த வருசமே இப்படித்தான் மனசு எப்பப் பார்த்தாலும் தவிச்சுக்கிட்டு இருக்குது. நான் என்ன சொல்லட்டும்போ, சொன்னா இவ்வள வான்னு போயிடும். நீ வந்தப்போ இரண்டடுக்கு மூடா நிறய தவசம் போட்டு நிறச்சு வைச்சிருந்ததல்ல. இன்னிக்கு வந்து பார்த்தீனா ரொம்ப விசனப்பட்டு போவாய் மூடாவிலே தவசம் எப்படி இருக்கும்? காட்டிலே காக்கா குருவிக்கு விதைச் சாப்பலே ஆச்சு. எல்லாம் பொருக்கி தின்னுட்டுப் போயிட்டதுகள். ஒரு துளி துளிச் சிருந்ததின்னா மண்ணுமூடி விதை உசுருபுடிச்சிருக்கும். கனமா இல்லாட்டியும், சருகு வெள்ளமோடவாவது துளிக்காது போயிட்டதே. மாடு கன்னுக்கு தீனி இல்லாமே நான் படா கயிட்டம் இவ்வளவு அவ்வளவுன்னு இல்லே. மனிசனுக்குப் பசிச்சா சோறு போடுன்னு கேப்பான். இந்த வாயில்லா ஜீவன்க என்ன செய்யும்? வாயா இருக்குது பசிக்கிறதுங் கறதுக்கு?

இன்னொன்னு சொல்லாமே வுட்டுட்டேனே. நம்ம தோட்டத்திலே இருந்த தென்னமரம் வாழைமரம் அமுட்டும் தண்ணியில்லாமே கருகிப்போச்சு. பனைமரங்களை நானே மாட்டுக்கு ஓலை வெட்டிப்போட்டு தீத்துட்டேன். அது கருகி நிக்கறதைப் பாக்கறப்போ எம் வயறு பகீர்னு பத்தி எறியுது. இப்பொ நான் வண்டி ஓட்டறதையும் வுட்டுட்டேன். அந்த எழவு வாடகை வண்டி ஓட்றதிலே மாட்டுக்கு போடறத்துக்கே சரியாபோவுது. கடைசியிலே, மாடும் மனுசனும் சேழிர்த்ததுதான் மிச்சம்.

அது என்ன மானங்கெட்ட பொளப்பு. நம்ம கேக்காமலே காட்டிலே நாலஞ்சு வேலா மரம் நின்னுதல்ல, அதை வாரம் ஒன்னு வெட்டி திருப்பூருக்கு விறகுக்கடைக்கு கொண்டுபோய் போட்டுட்டுவாறேன். அது தான் கொஞ்சம் செலவுக்கு தாக்காட்டுது. போறபோது நாம்பாத்தேன் எங்கே பாத்தாலும் குடிக்கக்கூட தண்ணி இல்லாமெ சனங்க எமுட்டு கயிட்டப்படறாங்க தெரியுமா? இந்த வருஷம் உங்காடு சும்மா தான் கிடக்குது. அதை ஒருவரும் வாரத்துக்கு உழ மாட்டேங்கறாங்க நான் தான் என்ன செய்யட்டும்? நீ இங்கிருந்தாலும் என்னையாட்டமாத்தான் அலமோதுவாய், போவுது. நீயாவது அங்கு சொகமாயிருக்கியல்ல. ஏதாச்சும் கூலி நல்லா கிடச்சுதின்னா சொல்லிவுடு. நானும் அவளைக் கூட்டிக்கிட்டு உங்கிட்டயே வந்துடறேன. காலம் செழிச்சா வந்திட்டா போவுது. இல்லாட்டி ஒரு யோசனை சொல்றேன் கேக்கறயா? உங்கிட்ட ஏதாச்சும் பணமிருந்தா கொடு. கிணத்தை இன்னம் ஒரு காலுமுளம் தோண்டிப்பார்த்தா தண்ணி வந்திடும்னு நினைக்கறேன். இப்ப நம்மூரு ஒட்டருக்கெல்லாம் வேலையில்லாமே ஊரைவிட்டு ஓடப்பாக்குறாங்கள். சொல்பகூலி கொடுத்தா போதும் ஏதோ நம்மவேளை நல்லதாயிருந்து சலம் கண்டுட்டதின்னா நம்மபாடு யோகம் தான். பத்து செரகாவதீ பாயும். ஏ உனக்கு எப்படித்தோணுது. சர்க்காரிலிருந்து கிணறு வெட்ட பணம் கொடுக்கறாங்கன்னு நம்ம நாச்சியப்பன்கூட எழுதிப் போட்டுட்டு அலைஞ்சுக்கிட்டிருக்கிறான். அவன் சொல்றான் "அப்பப்பா போதும் போதுமின்னு ஆய்போச்சு அவங்கபணம் குடுக்கறதுக்குள்ளே மழைபேஞ்சு கிணற்றில் தானே தண்ணி வந்துடும்கிறான்." நமக்கென்னத்துக்கு அந்த தொந்தரவு எல்லாம், சரி இவ்வளவோட எழுதறதை நிறுத்திக்கொள்றேன். எல்லாத்துக்கும் நீ உடனே ஒரு கடுதாசி எழுது. நாம் படறபாட்டை ஒரு நடைவந்து பார்த்தீனாத்தான் தெரியும். என்னாலே அமுட்டையும் எழுத முடியுமா?

இப்படிக்கு

உம்மேலே உசுராயிருக்கும்,

பழனிக் கவுண்டன்.

# பிருந்தாவனம்

(ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்)

மைசூரிலிருந்து 12 மைல் தூரத்திலிருக்கும் பிரசித்தி பெற்ற கண்ணம்பாடி அணைகட்டினருகில்தான் இந்த திவ்யமான தோட்டம் இருக்கின்றது. கிருஷ்ணராஜசாகரம் என்றும் அழைக்கப்படும் இக்கிராமத்தில் காவேரிநதியைத் தடுத்து 50 மைல்கள் விஸ்தீர்ணமுள்ள அணைக்கட்டொன்றை (Reservoir) கட்டி இருப்பது லோகபிரசித்தமான விஷயம். $1\frac{3}{4}$ மைல்கள் நீளமும் 130 அடிகள் உயரமும் கொண்ட இந்த அணைக்கட்டின் மேல்பாகத்தில் மோட்டார்வண்டி, மாட்டுவண்டிகள் முதலியனபோகப் பாதை ஏற்படுத்தி, பாதை இருபுறமும் கைப்பிடிச் சுவர்களின்மேல் பூர்ணசந்திரனைப்போன்ற டோம்கள் (Domes) கொண்ட மின்சார விளக்குகளின் கம்பங்கள் நிறுத்தப்பட்டிருப்பதும் பார்ப்பதற்கு ஆச்சரியமாகவிருக்கிறது.



தேவதைகளல்லாது மனிதரால் கட்ட முடியாத காரியம்என்று தோன்றும்படிக்கு இதன் இடதுபுறத்தில் பிருந்தாவன தோட்டம் வீற்றிருக்கிறது. இந்த ரஸ்தாவினுள் நுழையும் முன் ஓர் அழகான விச்வத்வாரதையும் (Gate) அதன் மேல்புரம் அழகான புல்லாங்குழல் கிருஷ்ண விக்ரகமொன்றையும் காண்கிறோம். தேவ மார்க்கம் போன்ற இவ்வழகிய ரஸ்தாவின் வழியாகச் சென்றால் நடுவில் பிருந்தாவனத்திற்குச் செல்லும் ரஸ்தா பிரிகிறது. அணைக்கட்டின் ரஸ்தாவிலிருந்து தோட்டத்தினுள் புகும் வழியில் கட்டையின் சுவரினருகில், காவேரியம்மனின் அழகிய பிரதிமையொன்றை வைத்து, அதன்கையிலிருக்கும் கும்பத்திலிருந்து எப்பொழுதும் ஜலம் கொட்டுமாறு செய்திருக்கிறார்கள். இதன் விளக்கம் தேசம் எப்பொழுதும் சுபிக்ஷமாக இருக்கட்டும் என்பதுதான். இந்த ஜலத்தை ஜனங்கள் அம்மன் தீர்த்தப்ரஸாதமாக ஏந்தி சேவிக்கிறார்கள். பானம் செய்கிறார்கள்.

இந்த அழகிய தோட்டத்தைச் செய்ய அநேக ஆயிரம் ரூபாய்கள் மைசூர் சர்க்கார் செலவழித்திருக்கிறார்கள். இதை மூன்று அந்தஸ்துகளுள்ளதாகச் செய்திருப்பதால் இதை ஆங்கிலபாஷையில் (Terrace Gardens) என்று அழைக்கிறார்கள். முதல் தோட்டத்தைவிட இரண்டாவதைச் சற்று தாழ்த்தியும், மூன்றும் தோட்டத்தை இன்னும் தாழ்த்தியும் கட்டி இருக்கிறார்கள்; ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இறங்குவதற்கு அழகிய படிக்கட்டுகள் இருக்

ின்றன. முதல் அந்தஸ்திற்கு இறங்கும் முன்புறம் மிகவும் அழகான சித்திரவேலைப் பாடுள்ள ஓர் மணிமண்டபம் அமைந்திருப்பது, அந்த நந்தவனமென்னும் சுந்தரிக்கு வைரக்கம்மல்கள் பூட்டியிருப்பதுபோல் அவ்வளவு சோபிதமாக இருக்கிறது. அம் மணிமண்டபத்தின் கோபுரத்தில் மயில் இரக்கைவிரித்தாடுவதுபோல் வர்ணபல்புகளால்ஜோடித்திருப்பது இரவில் விளங்கும். இந்த ஒரு மண்டபத்திற்குமட்டுமே முப்பதினாயிரம் ரூபாய்களுக்குமேல் செலவாகி இருக்கிறதாம். இந்த மண்டபத்திலிருந்து தோட்டத்தைக் கவனித்தால் மூன்று அந்தஸ்தும், அதற்கப்புறத்தில், காவேரியையும், அதற்கு அப்பறக்கரையில் கொலு போன்று அழகாக அமைந்திருக்கும் அக்கரைத்தோட்டமும் தோட்டமுழுவதும் குளங்களின் நடுவில் ஜலத்தைவாரி இறைத்துவிளையாடும் நீர்க்குழாய்களும் (Fountains) மிகவும் நன்றாகவும், ரமணீயமாகவும் தோன்றும். அப்பொழுது நாம் தேவேந்திரனுடைய பூங்காவனத்திலோ அல்லது ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா லீலைசெய்த சாக்ஷாத் பிருந்தாவனத்திலோ இருக்கிறோம் என்றே மயங்கும்படி இருக்கிறது.

படிக்கட்டுகளிலிருந்து இறங்கி தோட்டத்தில் பிரவேசித்தால் சுற்றிலும் மரகத ரத்தின கம்பளத்தை விரித்தாற்போல் பச்சைப் புல்லின் எழிலும், நடுநடுவில் நவரத்தினங்களால் செதுக்கப்பட்டிருப்பதுபோல் வித வித வர்ணப் புஷ்பச்செடிகள் நிறைந்த பாத்திகளும், தோட்டத்தைச்சுற்றிலும் அழகிய மங்கைகள் சூழ்ந்துக்கொண்டு தலைகுனிந்து, மெள்ள அசைந்தாடி, நாணிக் கோணி புன்முறுவலுடன் நம்மை வரவேற்கின்றனரோ என்னும்படிக்கு புஷ்பங்கள் நிறைந்த அலங்கார மரஞ் செடிகள் அசைந்தாடுகின்றன. கிரமமாகவும் ஏற்பாடாகவும் தோட்டத்தின் மத்தியில் கட்டி இருக்கும் அழகான குளங்களில் விதவிதமான வழிகளில் நீர்க் குழாய்கள் விளையாடிக் கொண்டிருக்க, குளங்களின் நாலாபுறங்களிலும் ஓடும் அழகிய சுத்தமான பாதைகள் பார்ப்போர் மனதை கவருகின்றன. இந்த அழகிய குளங்களில் அநேக புதிய புதிய வழிகளில் நீர்க்குழாய்களை வைத்துத் தண்ணீர் இறைக்கும்படி செய்திருக்கும் சௌந்திரியத்தை என்னால் விவரிக்க இயலாது. தண்ணீர்க் குழாய்களுக்கெல்லாம் ரிசர்வாயர் (Reservoir) லிருந்தே ஜலம் விடுகிறார்கள். மேல் விவரித்த மணிமண்டபத்தின் கீழ்ப்புறம் சிறிய படிக்கட்டுகள் கட்டின ஓர் அழகிய குளத்தில் ஜலம் கொட்டுகிறது. பன்னீர்ச் சொம்பைப் போலவும் இன்னும் விதவிதமாகக் கொட்டும் ஒவ்வொரு நீர்க்குழாயின் கூட்டங்களையும் விவரிக்க ஆரம்பித்தால் பெரிய வியாசம் ஆய்விடும். ஒவ்வொரு ஞாயிறு சனிதோறும், மற்றும் விசேஷ நாட்களிலும் அநேக கேண்டில் பவர்களுடைய மின்சாரவர்ண விளக்குகளை (Flood Lights) ஏற்றி, நீர்க் குழாய்களிலிருந்து வரும் ஜலத்தின்மேல் வெளிச்சம் விடுகிறார்கள். அப்பொழுது நீர்த் துளிகள் விதவிதமான வர்ணங்களில் பிரகாசிப்பதைக் கண்டால பரமானந்தமடைகிறோம். சிலதொட்டிகளின் குழாய்களுக்கு (Fountains) வானவில் வர்ணத்தில்(Rainbow colours) விளக்கு வெளிச்சம் விடுவது பன் மடங்கு ஆநந்தத்தைத் தருகிறது. இவ்விதம் வெகு அழகாக விளங்கும் இந்தத் தோட்டத்தை மைசூர் பார்க்க செல்பவர்கள் ஒவ்வொருவரும் போய்க் கண்டு களிக்காமல் திரும்புவதில்லை. இந்தக் கண் காக்ஷியை பார்க்க பார்க்கச் சலிப்பே ஏற்படாது.



# குற்றவாளி

(ஸ்ரீ கி. பி. நாகராஜன்)

1

இது நடந்து அநேக வருஷங்கள் ஆகி விட்டபோதிலும் இன்னும் என் மனதிலிருந்து அகலவில்லை. அடிக்கடி என்னுடைய மனம் "நீ ஒரு குற்றவாளி" என்று சுட்டிக் காட்டுகிறது. நான் உண்மையில் ஒரு குற்றவாளிதான். அதற்காக என்னை என்ன செய்தாலும் — இடது காலாலுதைத்தாலும் — பொறுத்துக் கொள்ளத் தயார். அப்பொழுதாவது என் மனம் சாந்தி அடையலாம்.

நான் இங்கு வரும்போது எனக்கு வயது ஐந்து. என் தாயார் தகப்பனார்கள் — வளர்ப்புத் தாய் தந்தையர்கள் — பிள்ளை இல்லாததால் என்னை எடுத்து வந்து அதிகப் பிரியத்துடன் வளர்த்து வந்தார்கள்.

என் தாயாரிடம் எனக்குச்சலுகை அதிகம். தகப்பனார் கச்சேரிக்குப் போனவுடன் நாங்களிருவரும் தான் ஒருவருக்கொருவர் துணை. அவள் காலில் ஏறி யானை ஆடுவேன். முதுகில் ஏறி குதிரை விடுவேன். அழகாக வாரியிருக்கும் மயிரைக் கலைத்துக் கொண்டு இழுப்பேன். கழுத்துச் சங்கிலியை வாயில் கடிவாளமாக மாட்டுவேன். புடவைத் தலைப்பில் தலையைமறைத்துக் கொண்டு பூச்சாண்டி காட்டுவேன்.

என் தகப்பனாரிடம் இவ்வளவு சலுகை கிடையாது. ஆனால் அவருக்கு என்னிடம் தாயாரைவிட எந்த விதத்திலும் பிரியத்தில் குறைவு இல்லை. கச்சேரியிலிருந்து வரும்போது ஏதாவது தின்பண்டமோ அல்லது விளையாட்டுச் சாமானோ வாங்கிக் கொண்டு வருவார். மாலை வேளைகளில் இருவரும் சேர்ந்து வெளியில் போவோம். என்னை எல்லோரும் அவருடைய சொந்தப் பிள்ளை என்று நினைக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை. ஆசையால் வேறு யாராவது வந்தால் என்னிடம் அதிகப் பிரியம் காண்பிப்பார். இந்த சமயங்களை நானும் வேண்டிய சாமான்கள் வாங்கிக்கொள்ள உபயோகப் படுத்திக் கொள்வேன்.

காரியஸ்தர் குப்புசாமி அய்யரிடம் எனக்கு ஒரு தனி விசுவாசம் உண்டு. அவர் என்னிடம் மரியாதையுடன் கூடிய அன்பைச் செலுத்தினார். நான் அவர் வீட்டுக்குப் போகும்போதெல்லாம் மலர்ந்த முகத்துடன் வரவேற்று, குளிர்ந்த மனதுடன் பேசுவார்.

2

இந்த வாழ்வெல்லாம் சிறிது காலம் தான். பிறகு எனக்கொரு போட்டி வந்தது. என் வரவால் அம்மாவுக்குப் பிள்ளை இல்லாத குறை நீங்கிற்று. ஆனால் புதிதாக பெண் இல்லாத குறை பிறந்தது. அதை என் தகப்பனாரிடம் சொன்னாள். அவர் அதற்கு இணங்கி ஏழையான ஒரு தூரபந்துவினிடமிருந்து ஒரு பெண்ணைக் கொண்டுவந்தார்.

எனக்கு அந்தப்பெண் வந்த போதே அதைப் பிடிக்கவில்லை. ஒரு வெறுப்பு உண்டாயிற்று. எங்கள் இருவரையும் தாய் தந்தையர்கள் இணைத்து வைக்கப் பார்த்தார்கள். அதுவும் என்னை "அண்ணா" என்று பிரியத்துடன் கூப்பிட்டது. நானும் அதை "தங்கச்சி" என்று அழைத்தேன். ஆனால் நான் அதை மனப் பூர்வமாக அப்படி அழைக்க வில்லை.

அது வந்தவுடன் என் சலுகைகளெல்லாம் குறைந்தது. முன்பெல்லாம் என்னை வளர்த்தவர்கள் யாரை யாவது கூப்பிட்டால் அது என்னைத்தான். ஆனால் இப்பொழுது அதையும் கூப்பிடலாம். அப்படிக் கூப்பிட்டால் அது என்னை முந்திக் கொண்டு விடுகிறது. எனக்கு அப்பொழுது கோபம் பொங்கும். கோபத்தை அடக்கிக் கொண்டு அதனிடம் அன்பாயிருப்பது போல் காட்டிக் கொள்வேன். இப்பொழுது ஏதாவது வாங்கி வந்தால்

அதற்குப்பாதி கொடுக்க வேண்டி இருக்கிறது. எனக்கு இது சற்றேனும் பிடிக்க வில்லை. ஒரு நாள் புதிதாக ஒரு "கேரம் போர்டு" வந்தது. இருவரையும் சேர்ந்து விளையாடச் சொன்னார்கள். விருப்பமில்லாத போதிலும் சம்மதித்து உட்கார்ந்தேன். கோபத்தால் காயை அடிப்பது போல் வேண்டுமென்றே "தங்கச்சி" விரலில் ஓங்கி "ஸ்ட்ரைக்கரால்" அடித்தேன். அது அழுது கொண்டே உள்ளே ஓடி விட்டது. என் ஆத்திரம் இன்னும் அதிக மாயிற்று.

அன்று இரவு தான் என் கோபம் உச்ச நிலையை அடைந்தது. எனக்குத் தாயாரிடம் படுத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றிற்று: அங்கே போய்ப் பார்த்தேன். ஆனால் அது அம்மாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்தது. என் ஆசை நிறைவேறு மென்று தோன்ற வில்லை. ஆனால் அம்மா என்னைக் கூப்பிட்டு பக்கத்தில் உட்காரச் சொன்னாள். எனக்கு அது பிடிக்க வில்லை. நான் பக்கத்திலிருக்கும் போது என்னைத் தவிர வேறு ஒருவருடனும் அவள் கொஞ்சுவது எனக்குப் பிடிக்க வில்லை. "அப்புறம் போகிறேன்" என்று சொல்லி அங்கிருந்து நகர்ந்தேன்.

ஆனால் நான் தகப்பனாரிடம் போக வில்லை. தனியாகப் படுத்தேன். மனதில் கோபமும் துயரமும் மாறி மாறி வந்தன. எப்படியாவது அதை ஒழித்துவிட வேண்டுமென்று நினைத்தேன். அது வருவதற்கு முன்பு நான் இருந்ததை நினைத்துப்பார்த்தேன். அம்மாவின் அன்பு, அப்பாவின் வாத்ஸல்யம், குப்புசாமி அய்யரின் விசுவாசம் எல்லாம் என் மனக் கண்முன் தோன்றிற்று. வெகுநேரம் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தேன். பிறகுதான் தூக்கம் வந்தது.

மறுநாள் முதல் அதன்படி வேலை செய்ய ஆரம்பித்தேன். அன்று முதல் அதனிடம் அதிக அன்பு காட்டினேன். ஒன்றும் அறியாத அதுவும் என்னை நம்ப, மேலும் என்னிடம் பிரியத்தோடு இருந்தது. பிறகு அதனுடன் அடிக்கடி கார்யஸ்தர் வீட்டுக்குப்போக ஆரம்பித்தேன். அதையும் அவரிடம் அதிகம் பழகும்படி செய்தேன். என்னிடம் போல் அதனிடமும் அவர் விசுவாசமாக இருந்தார்: அவரிடம் பழகப்பழக அவர் வீட்டில் சாப்பிடவும் தங்கவும் ஆரம்பித்தது. அப்பொழுது தான் என் முயற்சி பலிக்க ஆரம்பித்தது. என் தாயாருக்கு எங்கள் இருவருள் ஒருவர் இல்லாவிட்டால் தூக்கம் வராது என்பது தெரியும். அது வீட்டிலில்லாத இரவுகளில், நான் சீக்கிரம் தாயாரிடம் போவதில்லை; அவள் அதனிடம் அலுத்துக்கொண்டிருக்கும்போது நான் போய்க் கொஞ்சி அவள் அன்பை அதிகம் பெற்றேன். ஒரு நாள் வேண்டுமென்று நான் போக வில்லை. தாயார் அதைத் தேடி நான் காணுமல் வேலைக்காரனைக் கூப்பிட்டு "எங்கே" என்று கேட்டாள். "அது காரியக் காரங்க வீட்டுக்குபோயிருக்காப்பலே இருக்கு. சாயந்திரம் பார்த்தேங்க" என்று சொன்னான். அதைக்கேட்டு அலுத்து "சீ, தரித்ரம், எங்கேயோ தொலைந்துவிட்டது. வரவர, வீட்டிலேயே இருப்பதில்லை. நாளைக் குத் தொலைத்து விடுகிறேன்" என்று சொன்னாள் அம்மா. இதைக்கேட்ட எனக்கு ஆனந்தம் உண்டாயிற்று. இதுதான் சமயமென்று தாயாரிடம் சென்றேன். என்னை அணைத்துக்கொண்டு "என்ன இருந்தாலும் நீ சமர்த்துத்தான்! அதைப்பாரேன் அசடு" என்று சொல்லி, நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்தாள். அன்று அவள் அன்பை அனுபவித்ததுபோல் ஒருநாளும் நான் அனுபவித்ததில்லை. வெகுநாளாக மனதில் இருந்த பாரம் இறங்கியது.

மறுநாள் காலை அது சொந்த ஊருக்குக் கொண்டுபோய் விடப்பட்டது. எனக்கும் போட்டி ஒழிந்து பழைய சலுகைகள் திரும்பின. எனக்கு இது பெரிய ஜயமாக அப்பொழுது தோன்றிற்று. ஆனால் வயது ஆக ஆக என் குற்றம் மனதிற்குப் புலப்பட்டது. நான் குற்றவாளி—ஒன்றும் அறியாமல் என்னிடம் நிறைய அன்பு காட்டின ஒரு சிறிய குழந்தையை ஏமாற்றிக்கெடுத்த குற்றவாளி!—என்று அடிக்கடி மனம் என்னைத் துன்புறுத்துகிறது. யாராவது வாயாரத்திட்டினுலாவது மனம் நிம்மதி அடையும்.

(ஓர் ஆங்கிலக்கதையை அனுசரித்தது)

சௌபாக்கியவதியில் ஒரு காட்சி

# பாரத மணி

**சந்தா**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. 4 | (தபால் செலவு உள்பட) |
| வெளிநாடு | ரூ. 6 | (தபால் செலவு உள்பட) |

தனிப்பிரதி விலை 1 அணா.

**விளம்பரம்**

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. ⅛ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர்.**



## போஷாக்கில்லாமல் இருக்கிறதா?

உங்கள் கூந்தல்
இயற்கையான ஆகாரமில்லாமல்
உயிரற்றுப் போயிருக்கிறதா?
அப்படியானல் அந்தக் குறையை நீக்க

## ‘கெஸ்ரைன’

விலை அணா 12.

**உபயோகியுங்கள்.**

அது கேசத்திற்கு வனப்பையும் போஷாக்கையும் கொடுக்கக் கூடியது.

**விக்டோரியா டிபோ,**

வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை.



*Edited & Published by K. S. Venkataramani, at No. 312, Thambu Chetty Street, Madras, and Printed by T. K. Venkatesan, at The Jupiter Press, 16, Sembudoss Street, G.T., Madras.*